சோலம்புத்தார்-641

யாழினி

1

யாழினி நிமிர்ந்து அழைப்பு மணியை அமுக்கினாள் பெண் உதவியாளர் எட்டிப் பார்த்தாள். 'மேடம்'

''இன்னும் யாராவது நோயாளிகள்?''

''ஒரே ஒரு நோயாளி பாக்கி!''

''சரி, உள்ளே வரச்சொல்...''

ஐந்து வயது பையனுடன் வந்தாள் ஒரு தாய்.

''உட்காரும்மா. பையனுக்கு என்ன செய்யுது.''

''கை கால்ல சிரங்கு. சதா சொறியுரான்...''

பையனிடம் திரும்பினாள் யாழினி. ''எங்க கையை நீட்டுடா!''

நீட்டினான்.

''மணல்ல விளையாடுவியோ?''

''விளையாடுவேன்...''

''கைகாலை வேற சுத்தமா வச்சுக்க மாட்ட போல' இந்தா பாரும்மா பையனை மண்ணுல விளையாட உடாதே. நீகோ சோப் போட்டு குளிக்க வை. மருந்து எழுதித்தரேன். அவன் கைகால்ல ராத்திரி தடவிவிடு..''

''சரிங்கம்மா...''

யாழினி பிரிஸ்கிரிப்ஷன் பேடில் கிறுக்கலாய் எழுதி சரக் என்று கிழித்து நீட்டினாள்.

''பீசும்மா?''

''வாசல்ல இருக்ற பொண்ணுகிட்ட குடு...''

அவள் போனதும் எழுந்தாள் யாழினி. வாஷ்பேசினில் சோப் தடவி கைகளை கழுவிக்கொண்டாள். டிஸ்யூ பேப்பர் சிறிது கிழித்து கைகளை துடைத்துக்கொண்டாள். முகத்தை டச்அப் பண்ணிக் கொண்டாள். பெண் உதவியாளரை அழைத்தாள்.

''ராஜி! சீக்கிரம் கிளினிக்கை சாத்து...''

வெளியே நின்றிருந்த மாருதிக்கு நடந்தாள். டிரைவர் சீட் கதவைத் திறந்துகொண்டு அமர்ந்தாள். காரை கீ சொருகி ஸ்டார்ட் செய்து நியூட்டரலில் நிறுத்தினாள். கிளினிக்கை பூட்டி சாவியை ஓடிவந்து நீட்டினாள் ராஜி. பத்து ரூபா பேட்டாவை கொடுத்துவிட்டு கியர் மாற்றி விரைந்தாள்.

யாழினி இருபத்தியெட்டு வயது நிரம்பியவள். பாப் செய்யப்பட்ட பாத்திமா பாபு தலை. ஒரு டன் குல்கந்து குளுமையில் கண்கள். வழுக்கை தேங்காய் மெதுமெதுப்பில் அளவான மூக்கு. இரத்த ஓட்டம் மிகுந்த வரிவரியான பளபளக்கும் உதடுகள். சராசரி இந்தியப் பெண் உயரம். குழந்தை நல மருத்துவர்.

கால்கள் ஆக்ஸிலேட்டரை அழுத்தின. கார் வேகம் பிடித்தது. ஏப்ரலின் பகல் வெம்மை குறைந்து இரவு காற்று - திறந்திருந்த கார் ஜன்னல் வழியாக முகத்தில் அறைந்தது. கேசம் படபடத்தது. வழக்கத்தை விட இன்று 90 நிமிடம் தாமதம். நோயாளிகள் அதிகம். கார் நெய்வேலி டவுன்ஷிப்புக்குள் நுழைந்தது.

கார் எப் டைப் குவார்ட்டர்ஸின் வாசலுச்குள் நுழைந்தது. மாமரத்தின் அடியில் நிறுத்தினாள். இறங்கி கார் கதவை லாக் செய்தாள்.

வீட்டுக்குள் காங்கிரீட்டையே கலகலக்க வைக்கும் வெடிச்சிரிப்பு கேட்டது. அப்பாதான். அவரைத்தவிர வேறு யாருக்கு இப்படி சிரிக்கத் தெரியும். நெய்வேலி லிக்னைட் கார்ப்ரேஷனில் மைன்ஸ் டைரக்டர்.

கால் ஹீல்ஸை வாசலில் உதறிவிட்டு உள்ளே போனாள்.

''அப்பா! மெதுவா சிரிங்க. ஷிப்ட் சங்கு ஊதுதுன்னு அவனவன் வீட்டுக்கு பறக்கப் போரான்க...''

டைனிங் டேபிளில் இரவு உணவு பரிமாறிக்கொண்டிருந்தாள் அம்மா விசாலினி. முத்துப்பாண்டியன் நிமிர்ந்தார்.

''வாம்மா யாழினி! என் சிரிப்பை கிண்டல் பண்றியா? இந்த சிரிப்பை பாத்துத்தான் உங்கம்மாவே என்னை லவ் பண்ணி கல்யாணம் பண்ணிக்கிட்டா. இல்ல விசாலினி?',

''போதுமே உங்க வீரபிரதாபம். வாய மூடுங்க...''

''அவ கெடக்கிரா. யாழினி வாம்மா சாப்பிட...''

''பசிக்கலைப்பா...''

''சும்மா ஒரு வாய்...''

'ஆ!'. வாய் திறந்து காட்டினாள் யாழினி. உருளைக்கிழங்கு மசாலாவை சிறிது சப்பாத்தியில் மடித்து ஊட்டினார்.

தலையில் அடித்துக் கொண்டாள் விசாலினி.

''ஊட்டிவிடுற வயசா இவளுக்கு? இப்டி செல்லம் குடுத்து செல்லம் குடுத்துதான் இன்னைக்கி - விவாகரத்து ஆகி மொட்டை மரமா நிக்ரா...'' சொன்னவள் நாக்கை கடித்துக்கொண்டாள். சொன்ன வார்த்தைகள் தாக்கத்

தில் இறுகினார் முத்துப்பாண்டியன். யாழினி சுயகுரக்க மாய் ஹிம் என சிரித்துக் கொண்டாள்.

''அம்மா! புருஷன் தேள் மாதிரி கொட்டுவான். பொண்டாட்டி குனிஞ்சு அத்தனையும் வாங்கிட்டு இருக்கணும்னு என்ன நியதி? நான் திருப்பி கொட்னேன். இந்த மொட்டை மரம் பட்ட மரம் வார்த்தை எல்லாம் பேசி என் மனசை புண்படுத்தாத ''

''அம்மா, வாய் தவறி வந்துருச்சுடி. என் ஒரே மகள் ஒத்தைக் குரங்கா நிக்றாளேன்ற ஆத்தாமைல பேசிட்டேன் ..''

''அம்மா! பொறக்றப்பயே எந்த பொண்ணும் புருஷனோடு சேந்து பொறக்கலை. சாகிறப்பயும் அவனோடு கை கோர்த்து சாகிறதில்லை. கவலையை விடு. நீங்க ரெண்டு பேரும் இருக்ற வரைக்கும் நான் ஒத்தைக் குரங்கில்லை ..''

அப்பா தோளை குலுக்கிக் கொண்டார்.

''லெட்டஸ் சேஞ்ச் தி டாபிக்...''

''சரி ஈராக் - அமெரிக்கா போரத பத்தி பேசுவமா?''

''அய்யய்யோ வேணாம்மா. அதில்லயும் உனக்கும் உன் அம்மாவுக்கும் கருத்து வேறுபாடு வரும். அம்மா சதாம் உசேனை ஹீரோன்னுவா. நீ ஜார்ஜ் புஷ் செய்றது தான் சரின்னுவ ''

அம்மாவும் யாழினியும் புகைய புகைய சிரித்தனர்.

''அம்மா! ஒண்ணு மறந்திட்டேனே... இப்பத்தான் ஞாபகம் வருது?''

''என்னப்பா?''

''நாளைக்கி ஈவினிங் ஏழு மணிக்கு நம்மவீட்ல பார்ட்டிம்மா...''

''எதுக்குப்பா?''

''நம்ம லிக்னைட் கார்ப்பரேஷன் இன்னொரு மைன்ஸ் திறக்கப் போவுது. அதற்கான முன்னேற்பாடுகளுக்காக ஜாம்செட்பூரிலிருந்து ஒரு குழு நாளை வருது.''

''இஸிட்? வெரி நைஸ்...''

''அந்த குழுவுக்கு யார் தலைமை தாங்கி வரதுன்னு தெரியுமா?''

''சஸ்பென்ஸா? சொல்லுங்க.''

''இளஞ்சேரன் வரார்.''

புன்னகை முகம் இருண்டது. ஆறு வருடங்களுக்கு முன் விவாகரத்துப் பெற்ற மாஜி கணவன்-மனக்கண்ணில் வந்தான். கற்பனையிலும் கிண்டல் செய்யும் தொனியில் சிரித்தான். ஆர்னால்டு ஸ்வாஸ்நெக்கர் போன்ற சதுர முகமும் திண்ணென்ற உடலும் பெண்களுக்கு விசேஷ் வலை வீசும் ஆண்மை தெறிக்கும் சிரிப்பும் வித்தியாசமான நடையும் ஞாபகத்துக்கு வந்தது.

உலகம் சின்னஞ்சிறு உருண்டை. எவனை என் மூளையின் நினைவு செல்களிலிருந்து அரிந்து வீசினேனோ அவனே நாளை திரும்ப என் கண் முன்னே நிற்கப் போகிறான். நல்லபாம்புக் குட்டியாய் சிரிக்கப் போகிறான்

''வரான்னு சொல்லுங்க...அவன் எதுக்குப்பா திரும்ப?''

''கார்ப்பரேஷன் கூப்ட்டுருக்கு வரார். ஜியாலஜியில் உயர் படிப்பு படிச்சிருக்கார். அவர் தான் இந்த வேலைக்கு சரியான ஆள் ..''

''எங்க தங்கப் போரான்?''

''நிச்சயம் இங்க இல்ல. கார்ப்பரேஷன் அவருக்கு குவார்ட்டர்ஸ் அலாட் பண்ணியிருக்கு.கார் குடுத்துருக்கு. அவருக்கு அஸிஸ்ட் பண்ண ஏராளமா ஆளு.''

''அவன் பற்றி பெருமை பாடாதிங்க. ஒரு உதவி பண்ணுவீங்களாப்பா?''

''என்னம்மா?''

''நாளைக்கி விருந்தை ஏதாவது காரணம் சொல்லி கேன்சல் பண்ணிடுங்களேன்...''

''எதுக்கும்மா கான்சல் பண்ணணும்?''

''அப்பா! இப்பத்தான் நான் நிம்மதியா - அவன் நினைப்பே இல்லாம நான் உண்டு என் வேலை உண்டுன்னு இருந்திட்டுருக்கேன். திரும்பவும் அவன் என் கண் முன்னாலே நின்னா - என் நிம்மதி போய்டும். கட்டாயம் விருந்து குடுமகணும்னா எங்கயாவது கண் காணாத தொலைவுல அரேஞ்ச் பண்ணுங்க...''

''சாரிம்மா...விருந்தை கான்சல் பண்ணமுடியாது.''

''அப்படின்னா நான் நாளைக்கி ராத்திரி ப்ரண்ட் வீட்ல தங்கிக்கிரேன்.''

''உன்னிஷ்டம் போல செய்ம்மா...''

அம்மா ஒரு டம்ளர் பால் கொண்டு வந்து வைத்தாள். எடுத்து குடித்தாள் யாழினி.

''நான் மாடிக்கு தூங்கப்போரேன்ப்பா. குட் நைட்.''

மாடிக்கு வந்தாள் யாழினி. முந்தானையை எடுத்து கொசுவத்தை உருவி சேலையை களைந்தாள். மடித்து

வைத்தாள். தலைக் கேசத்தை தளர்த்திக் கொண்டாள். நைட்டி உடுத்திக்கொண்டாள். தி. ஜானகிராமனின் 'மரப்பசு' எடுத்து படுக்கையில் குப்புற படுத்துக்கொண்டு படிக்க ஆரம்பித்தாள். ஆனால் ஒரு வரியைக்கூட படித்து கிரகிக்க முடியவில்லை. மனம் முழுவதும் இளஞ்சேரன் பற்றியே,புத்தகத்தை வீசி எறிந்தாள். மல்லாக்கவந்தாள். முகத்தில் அறைவிளக்கு வெளிச்சம் பளீர் வெண்மையாய் பிரதிபலித்தது. இதயம் திரும்பவும் இளஞ்சேரன் வரப் போகிறான் என்றதும் பச்சைப்புல் கரண்டும் பசு வாய் சத்தத்தில் இயங்கியது. உடலின் மேற்தோல் முழுவதும் ரோம மரங்கள் புது உணர்வில் தத்தளித்தன.

ஆறு வருட இடைவெளியில் எப்படி இருப்பான். பழைய திமிரும் நக்கல் பேச்சும் மாறியிருக்குமோ? வேறு யாரையும் கல்யாணம் பண்ணியிருப்பானோ? நாளை இரண்டு குழந்தைகளுடன் வந்து நிற்கப் போகிறான். என்னைப் பார்த்ததும் முகத்தில் என்ன எக்ஸ்பிரஷன் காட்டுவான்? ஆம்பிளைத்துணை இல்லாம நோயாளி களை மாரடிச்சுகிட்டு அவதிபடுறியா படுன்னுபாப்பானோ பாத்தியா என் மனைவிய - உன்னை விட அழகா புஷ்டியா ஒரு நார்த் இண்டியனை பிடிச்சிருக்கேன். பாத்தியா ரெண்டு குழந்தைகள் - ஒரு காம்ப்ளான் பாய். ஒரு காம்ப்ளான் கேர்ள்? அதான் டைவர்ஸ் பண்ணிக் கிட்டமே, இன்னும் ஏன் நீ வேறொரு கல்யாணம் பண்ணிக்கலை? நான் தொட்ட உடம்பை வேறு ஒரு வனுக்கு குடுக்க தயக்கமா? இல்ல... உன் குணத்துக்கு சரி யான மாப்பிள்ளையை பிரம்மன் படைக்கவே இல்லையா? நான் வேண்டுமானால் உனக்கு ஒரு மாப்பிள்ளை பாக் கட்டுமா? கேள்விகள் அடுக்குவானோ?

இதென்ன பைத்தியக்காரத்தனம்? நாளைக்கித்தான் நான் அவன் கண்ல படாம ப்ரண்ட் வீட்ல தங்கிக்கப்

போரேனே? பின்னெப்படி மேற்சொன்ன கேள்விகள் எழும்? ஒரு நாள் சரி - எத்தனை வருஷம் தங்கப் போரானோ? அத்தனை நாட்களும் அவனைப் கபார்க்காமல் இருப்பது எப்படி சாத்தியம்? சரி. அவனைப் பார்க்க இவ்வளவு ஏன் பயப்படணும்? அவனென்ன பேயா பிசாசா? விலக விலகத் தான் கவர்ச்சி அதிகமாகும்.

நான் ஏன் இவ்வளவு பயப்படுகிறேன்னா காரணம் இருக்கத் தான் செய்யுது. கடந்த மூன்று வருடங்களாக- ஆர்த்தோ பீடியாட்ரிக் டாக்டர் நாகதேவ் என்னையே சுற்றிசுற்றி வருகிறார். என்னையே திருமணம் செய்து கொள்ளத் துடிக்கிறார்- இளஞ்சேரன் அளவுக்கு அவர் அழகா இல்லாவிட்டாலும் எனக்கு அடங்கி நடப்பார், என் ஈகோவை பஞ்சர் செய்யமாட்டார் என்ற நம்பிக்கை இருக் கிறது. நாகதேவ் காதலுக்கு பச்சைக்கொடி காட்டிய இந்த தருணத்தில் இளஞ்சேரனை பார்த்தால் மனம் மாறி விடுவேனோ என பயப்படுகிறேன் போலும். இந்த பயம் அர்த்தமற்றது தேவையில்லாதது.

இளஞ்சேரனை திரும்ப பார்க்கும்போது பழைய கசப்பான நினைவுகள் ஞாபகம் வரும். இளஞ்சேரன் மீதுள்ள நீறு பூத்த வெறுப்பு மூண்டெழும். இதுவரை நாகதேவ் மேல் காதல் இல்லை. இளஞ்சேரன் எதிரில் நாகதேவ்வுடன் கைகோர்த்து திரிந்து ஆத்திரம் ஊட்ட வேண்டும். நான் அடிக்கும் லூட்டி தாங்காமல் - அவன் வந்த வேலையை விட்டுவிட்டு ஜாம்செட்பூர் ஓடவேண்டும். ஸ்வீட் ரிவன்ஞ்ச். நாளை கட்டாயம் அவனை சந்திக்க வேண்டும்.

- பலமாதிரி யோசனைகளில் தத்தளித்த யாழினி கடைசியில் தூங்கிப் போனாள். ஆழ்ந்த தூக்கத்தில் அவள் வாய் அனிச்சையாய் பல தடவை 'இளஞ்சேரன்' என்றது.

நாகதேவ், யாழினி எதிரில் அமர்ந்திருந்தான். வயது 32. சதைபிடிப்பு இல்லாத ரகுவரன் உயரம். கண்களில் பவர் கிளாஸ். நடுவகிடெடுக்கப்பட்ட கோரை முடி. அதிக யோசனை செய்யும் முகம்.

இருவர் எதிரிலும் சூடு பறக்கும் கமகமக்கும் காப்பி இரண்டு கோப்பைகளில் வந்தது.

ஒரு கோப்பையை எடுத்துக்கொண்டு யாழினி மகா இயல்பாய் ''இது உங்களுக்கு. குட்ந்யூசா பேட்ந்யூசா புரியல. ஜாம் செட்பூரிலிருந்து என் மாஜி கணவன் இளஞ்சேரன் வந்திருக்கிறான். இன்றிரவு அவனுக்கு எங்கள் வீட்டில் விருந்து...''.

தன் கோப்பை காப்பியை உறிஞ்சப்போன நாகதேவ் அந்த நொடியில் தடுமாறினான். காப்பி சிந்தியது. திடுக் கிட்டான். ஆனால் திடுக்கிட்டதை மறைத்தான். தலை கேசத்தை சரி செய்து கொண்டான். உற்காகம் வடிந்தான்.

''இது தவிர்க்க முடியாதது யாழினி. என்றைக்காவது ஒருநாள் உங்களிருவர் பாதையும் க்ராஸ் பண்ணத்தானே வேண்டும்? '' என்றான் கண்களில் சிறிதளவு ஆர்வத் துடன். ''இன்னைக்கி ராத்திரி அவர பாக்கப்போறீங் களா?''

''அதான் ஒரே குழப்பமா இருக்கு. நாகதேவ்! நீங்களே ஒரு யோசனை சொல்லுங்களேன்''...

யோசித்தான் நாகதேவ்.

''கட்டாயம் அவர பாருங்க யாழினி. அப்பத்தான் ஒன்ஸ் பார் ஆல். அவர் உங்களுக்கு எந்த விதத்திலாவது தேவையானவரான்னு தீர்மானிக்கலாம்...''

''நீங்க ரொம்ப பெருந்தன்மையானவர் நாகதேவ்!'' வியந்தாள் யாழினி. ''மத்த ஆப்பிளைங்க யாரா இருந்தாலும் பொறாமைல வெந்து செத்துடுவாங்க தெரியுமா?''

''இதுல பெருந்தன்மை எதுவுமில்லை. திரும்பவும் அவர பாத்து மூளுற எரிச்சல்ல - நீங்க ஓடிவந்து மார்பு அழுந்த என்னை கட்டிக்கணும். நாளைக்கே கல்யாணத்தை வைங்க. தாலி கட்டுங்க. சாந்திமுகூர்த்தம் ஆகட்டும்னு அவசரப்படணும்...''

யாழினி புருவம் உயர்த்தி நாகதேவை உறுத்தாள்.

''உங்க பொறுமை வேறு யாருக்கும் வராது. நான்கு வருடங்களாக உங்களுக்கு தகுந்த பதிலைச் சொல்லாமல் காக்க வைத்து வருகிறேன். அது குற்ற உணர்வாய் நெஞ்சில் கணக்கிறது நாகதேவ்!''

நாகதேவ் யாழினியின் கைகளை பற்றிக்கொண்டான்.

''யாழினி! உங்க மனசு எனக்கு புரியுது. எங்க நம்ம கல்யாணம் இரண்டாவது தவறாய் ஆகிவிடுமோ என பயப்படுகிறீர்கள். நான் எவ்வளவு காலத்திற்கும் காத்திருக்க தயார். நிச்சயம் என் பொறுமைக்கு தகுந்த பரிசு உண்டு. அந்த பரிசு நீங்கள்தான்...''

யாழினி உணர்ச்சிவசப்பட்டாள். ''நாகதேவ்! இது மட்டும் ஹோட்டலா - நம்பள சுத்தி நூறுபேர் உக்காந்திருக்காட்டி. இப்ப நீங்க பேசுன பேச்சுக்கு ஒரு முத்தமே குடுத்திருப்பேன்...''

நாகதேவ் சிரித்தான். ''இப்பயும் ஒண்ணும் கெட்டுப் போவல. நீங்க குடுங்க... நான் எல்லாரையும் ஒண்ண மூடிக்கச் சொல்றேன்...''

''சத்தம் கேட்குமே!''

''பஞ்சு வச்சு காத அடச்சிக்க சொல்லுவம்''

''நாகதேவ்! நான் உங்க அன்புக்கு அருகதை இல்லாதவ ..''

''என்னை பெரிய்ய மகாத்மா ஆக்காதிங்க யாழினி.''

''சரி காந்திஜி!'' சிரித்தாள் யாழினி.

''புறப்படுவோமா?'' எழுந்தான். எழுந்தாள்.

''நாகதேவ்! வாங்க கார்ல உங்கள ஆஸ்பத்திரில விட்டுருரேன் ''

''பரவால்ல யாழினி ..நான் கவசாகில வந்தேன் .. நாளை சந்திப்போம் வருகிறேன் ''

கவசாகியை உதைத்து கிளப்பினான் நாகதேவ். அவன் போய் கடுகாய் மாறும் வரை காத்திருந்தாள் யாழினி.

மணி மாலை ஆறைத் தாண்டியதும் இருப்புக்கொள்ளவில்லை. யாழினி தவித்தாள். பிரிஸ்கிரிப்ஷன் தப்புத் தப்பாய் எழுதினாள். கடைசியில் எழுந்தாள். ''ராஜி! மீதி பேஷன்ட்ஸை நாளைக்கு பாக்றேன்னு சொல்லி அனுப்பு தலை வலிக்குது ..''

ராஜி போனவுடன் எழுந்து காருக்குப் போனாள். காரை வீட்டை நோக்கி கிளப்பினாள். வீட்டு வாசலில் ஏராளமான கார்கள். இறங்கி வீட்டுக்குள் நடந்தாள். வீட்டுக்குள் கலவையான உற்சாக சத்தம். பப்பே முறையில் உணவு பரிமாறல். பீங்கான் தட்டுகள் சப்தம்.

நான்கு வயதான ஆசாமிகளுடன் பேசிக்கொண்டிருந்த அப்பா திரும்பினார். அட யாழினி! வரமாட்டேன் என்றாளே? ஓடிவந்தார். சங்கோஜப்படும் மகளை அழைத்துக் கொண்டு போய் ஒவ்வொருவராய் அறிமுகப்படுத்தினார்.

இளஞ்சேரன் வரவில்லையோ?

பத்தாவது ஆளாக அறிமுகம் பண்ண அப்பா சுட்டிய ஆசாமி நிமிர்ந்தான். அதே டெவில் இளஞ்சேரன்! நிறம் மட்டும் சிறிது கறுத்திருந்தான். தலைமுடி அடர்த்தி குறைத்திருந்தான். ஆனால் அதே ஆண்மை தெறிக்கும் முகம். சிரிப்பு.

திரும்பிய யாழினியின் இதயம் கயிறுபோல் இறுக்கிக் கொண்டது. உதடுகள் ஜிவுஜிவுத்தன. கைகால்கள் உதறின. வார்த்தைகள் தொண்டையில் ஸ்தம்பித்தன. காரணமில்லாமல் அவனுடன் தனித்திருந்த இரவுகள் ஞாபகத்துக்கு வந்தன. அவனுடைய வியர்வை வாசம், அவனுடைய வெப்ப மூச்சு.

புல் சூட்டில் கம்பீரமாக பாம்பே டையிங் விளம்பர மாடல் போல் இருந்தான் இளஞ்சேரன். அதே நக்கலும் திமிரும் எரிச்சல் கிளப்பும் முகபாவமும் கொண்டு போலி பவ்யமாய் சற்றே குனிந்து வணங்கினான்.

''ஹாய் யாழி!''

அவனைத் தவிர வேறு யாரும் அவளை அவ்வளவு உரிமையாய் பெயரை சுருக்கி செல்லமாய் அழைத்ததில்லை. அவன் அழைப்பில் எத்தனை இயல்பு. ஆறு வருட பிரிவு தொனிக்காமல் யாழினி திகைத்தாள்.

2

இன்டோர் ஸ்டேடியத்துக்குள் டேபிள் டென்னிஸ் பந்து எதிர் எதிர் திசைகளில் தட்டப்படும் சப்தம் வெவ்

வேறு சத்த லயத்தில் யாழினியும் அவள் தோழியும் விளையாடுவதை மாணவர் கும்பல் ரசித்துக்கொண்டு இருந்தது.

''ஆகா சூப்பர் ஆட்டம்டா!''

''ச்ச்ச்.பின்னிட்டா பின்னி..அந்த பச்சை ஷர்ட்ஸ் ''

''பொம்பளைங்க ஆட்டத்துல ரொம்ப ரசிக்கப்பட வேண்டிய விளையாட்டு எது தெரியுமாடா?'' இளஞ்சேரன்

''எது பாட்மின்டனா?''

''பாஸ்கட் பால்தான்...''

''எப்படிடா சேரா;''

''விளையாடும்போது தக்தக்னு தொடை அதிரும் ''

''இளஞ்சேரா! உன் பேச்சுக்கே 'ஏ' சர்டிபிகேட் தரலாம்..''

''இன்னும் கேள்! இந்த பட்லிகள் ஆடறதி பார்த்ததும் கழனியூரனின் ஒரு ஹைக்கூ கவிதை ஞாபகம் வருது!''

''சொல்லு சொல்லு!

தலையில் ஒரு கும்பம்''

கும்பக்காரி ஆடுகிறாள்.

''கும்பங்கள் ரசிக்கப்படுகின்றன...''

''தூள் தூளுடா மச்சி!'' ஆரவாரமாய் கைதட்டல்.

யாழினி ஆட்டத்தை இடையில் நிறுத்திவிட்டு ஓடி வந்தாள்.

''ஸ்டாப் இட்!''

இளஞ்சேரன் நக்கலாய் திரும்பினான்.

''பொம்பளைங்க இன்டோர் கேம் ஆடும்போது உங்க ளுக்கு இங்கென்ன வேடிக்கை அசிங்க காமென்ட்ஸ். நீங்கள்லாம் உண்மையில் ஸ்டூடன்ஸ்தானே?''

''நாங்க எம்.எஸ்சி. ஜியாலஜி படிக்கிறோம். உன்னைப் பார்த்தாத்தான் வயலுக்கு வேலைக்கு போறவ மாதிரி இருக்கு ..''

''மைண்ட் யுவர் வேர்ட்ஸ். நாங்க மெடிக்ஸ் ..''

''மெடிக்கல் படிச்சா பெரிய கொம்பா? ஆம்பிளைங்க யாரும் பார்க்கக் கூடாதுன்னா எங்கயாவது காட்டுல போய் விளையாடு.''

''இங்கதான் விளையாடுவோம். ஏதாவது கமென்ட் அடிச்சீங்க ..''

''என்ன செய்வீங்க மேடம்?''

''அடிக்கிற அடில புதுசா பல் செட் கட்டவேண்டிய கட்டாயம் ஏற்படும்...''

''அப்படியா! அதையும் பார்ப்போம் ''

''கமென்ட் அடிக்கிற வரைக்கும் ஏன் பொறுக்கணும்? இந்தா வாங்கிக்க '' யாழினி எட்டி இளஞ்சேரனை அறைந்தாள். கை கன்னத்தில் பதியும் முன் கைகளை பற்றிக் கொண்டான். முரண்டித்தாள். பிடித்த கையை முறுக்கியபடி மிக நெருக்கமாக அவள் கண்களை திமிராய் உறுத்தான். வலதுகை ஆட்காட்டி விரலால் யாழினியின் உதட்டைத் தொட்டு தன் உதட்டில் ஒத்திக் கொண்டான்.

''தித்திக்குதுப் போ. வாங்கடா பசங்களா!'' தன் கும்பலுடன் ஓடி மறைந்தான்.

யாழினி ஸ்தம்பித்து நின்றாள். அவளின் தோழி, ''ரவுடிப்பய! வாடி பிரின்ஸ்கிட்ட ரிப்போர்ட் பண்ணு வோம்.''

எதிர்மறையாய் தலையசைத்தாள் யாழினி.

''வேண்டாம்டி!''

''ஏன்!''

''அவன் திமிர் பார்வையும் - ஆட்காட்டி விரல் ஒத்தட முத்தமும் - ஐ'ம் சிம்ப்லி ட்ராப்டு. நானும் திமிர், அவனும் திமிர். ஐ லைக் ஹிம் ..''

''ம். அப்புறம்?''

''க்ளைமேக்ஸ்க்கு அவசரப்படாதே!''

பின் அடுத்து அடுத்து யாழினி-இளஞ்சேரன் சந்திப்பு கள் நடந்தன. காதல் உண்டானது.

''யாழி!''

''ம் ''

''யாழி''

''ம்''

''நம்ம ரெண்டு பேருக்கும் படிப்பு முடியுது. கல் யாணம் பத்தி உங்க அப்பாம்மாகிட்ட பேசலாமா?''

''ஷ்யூர்.. ஷ்யூர்...''

''எப்ப வரட்டும்?''

''ஒரு விடுமுறை நாளில் வாங்க இளஞ்சேரன்...''

''ஓ கே!''

இளஞ்சேரன் தன்னிடம் உருப்படியாக உள்ள ஒரே ஒரு பேன்ட் சட்டையை அணிந்து கொண்டான். யாழினி அப்பாவிடம் பேச வேண்டியதை மனதுக்குள் ஒத்திகை பார்த்துக் கொண்டான். நெய்வேலி போகும் பஸ்சில் ஏறினான். பஸ் வடலூர் வழியாக நெய்வேலி சேர்ந்தது.

அழைப்பு மணியை அமுக்கினான் இளஞ்சேரன்.

கதவு திறந்தது. ''யாரு வேண்டும்?''

''சார் இருக்காங்களா?''

''இருக்காங்க. நீங்க யார்?''

சீட்டில் தன் பெயரை எழுதிக் கொடுத்தான். ''இதைப் போய் குடுங்கபோதும்...''

''இப்படி உக்காருங்க. ஐயாகிட்ட சீட்டை காட்ட றேன்...''

சற்றுநேரத்தில் முத்துப்பாண்டியன் வந்தார்.

எழுந்து ''வணக்கம்'' என்றான்.

''பரவாயில்ல உக்காருங்க!'' எதிரில் அமர்ந்தார்.

''நீங்க யார் தம்பி?''

''நா உங்க பெண்ணு படிக்கிற யூனிவர்சிடில படிக் கிறேன்''

''சரி...''

''நானும் உங்க பொண்ணும் ப்ரெண்ட்ஸ்...''

''ப்ரண்ட்ஸ் மட்டும்தானா!''

''கா—கா-காதலிக்கிறோம்''

முத்துப்பாண்டியன் சப்தமாய் யாழினியை அழைத் தார். ஓர் அறையிலிருந்து வெளிப்பட்ட யாழினி இளஞ் சேரனை பார்த்ததும் சிரித்தபடி வந்து அப்பா அருகில் அமர்ந்தாள்.

''உங்க பேரென்ன தம்பி?''

''இளஞ்சேரன்...''

''இதுவரைக்கும் எத்தினி பேர காதலிச்சிருப்பீங்க?''

இளஞ்சேரன மனதுக்குள் கணக்கிட்டான்.

''யாழினி சேத்து ஏழு பேரு!''

யாழினி முறைத்தாள். கிண்டல் செய்கிறானா?

''நிஜமாவா சொல்றீங்க தம்பி?''

''ஆமாங்க ''

''மீதி ஆறுபேர் என்ன ஆனாங்க?''

''சிலபேருக்கு ஓசில சினிமா, டிபன், டிரஸ் தேவைப் பட்டது. அதுக்கு நான் அகப்பட்டேன். அப்புறம் அவங் களே கழட்டிக்கிட்டாங்க. ஒரு பொண்ணுக்கு படிப்புக்கு இடையிலயே கல்யாணம் ஆயிடுச்சு, கல்யாண வீட்டை அலங்கரிச்சு, மாப்பிள்ளை வீட்டுக்காரங்களை வரவேற்று உதவுனேன். கடைசியில் யாழினி!''

''ஹவ் டோர் யூ ஆர்! அப்ப யாழினி கிடைக்காட்டி எட்டாவதா யாரையாவது காதலிப்பியா?'' ஒருமைக்குத் தாவினார் முத்துப்பாண்டியன்,

''வேற வழி? காதல்ல தோத்துட்டா நோ தாடி. நோ தண்ணி. ட்ரை நெக்ஸ்ட் காதல்!''

''அப்படின்னா உன் காதல் வெறும் இன்பேச்சு வேஷன்!''

''நோ...ப்ராக்டிகல் லைப்புக்கு என் பாலிசிதான் சரி''

''இப்ப என்னை எதுக்கு பாக்க வந்த?''

''உங்க பொண்ணை எனக்கு கல்யாணம் பண்ணி வையுங்கன்னு கேக்க வந்தேன்...''

''உன் பேச்சிலேயே நீ ஒரு சபலகேஸ்னு தெரியுதே!''

''நானா யாரையும் விட்டு விலகி வரவில்லை. அவங்களா போனாங்க. யாழினி உறுதியா இருக்கற

வரைக்கும் நானும் உறுதியா இருப்பேன். உங்க பொண்ணுக்கு ஒரு நல்ல கணவனா இருப்பேன்னு உறுதி கூறுகிறேன்...''

''உன் பேமிலி எங்க இருக்கு?''

''ஜாம்செட்பூர்ல...''

''அங்க இருந்தா இவ்வளவு தூரம் படிக்க வந்த?''

''படிப்புக்கு அலாஸ்கா கூட போகலாம் ..''

''உன்னோட பொறந்தவங்க எத்தனை பேரு?''

''நா ஒரே ஒருத்தன் தான்...''

''படிப்பே இப்பதான் முடிக்கப் போற. நிரந்தர வருமானமில்லை. அதுக்குள்ள கல்யாணத்துக்கு என்ன அவசரம்?''

''இந்திய இளைஞர்கள் - எட்டாத உயரத்தில் வைக்கப்படும் செக்சை தினம் 24 மணி நேரம் நினைத்து நினைத்து உடலும் மனதும் நொந்து போகிறார்கள். எதிர்கால திட்டங்கள் இல்லாமல் வீணாகிப் போகிறார்கள். திருமணத்தின் பின் அவர்கள் உடல் தேவை பூர்த்தியாகி அவர்களின் முழு கவனமும் எதிர்கால திட்டங்களை செயலாக்குவதில் ஈடுபடுகிறது. ஆகவே கல்யாணத்துக்கு அவசரப்படுகிறேன் ..''

''நான் கல்யாணத்துக்கு ஒத்துக்கலைன்னா?''

''நிச்சயம் ஒத்துப்பீங்க. ஏன்னா - உங்க மகளுக்கு கணவனாய் வர தேவையான அனைத்து தகுதிகளும் என்னிடம் உள்ளன, பணத்தை தவிர. வறட்டுக் கவுரவத்துக்காக நீங்கள் மறுப்பீர்கள் என நான் நம்பவில்லை ..''

''உங்க அப்பா அம்மா ஒத்துப்பாங்களா?''

''நிச்சயமா. எங்க பூர்வீகம் மணப்பாறை. பிழைக்க வழிதேடி ஜாம்செட்பூர் போனவங்க நாங்க. தமிழை மறக்காமத் தான் எங்கப்பா எனக்கு இளஞ்சேரன்னு பேரே வச்சாங்க. ஒரு தமிழ்நாட்டுப்பெண் மருமகளா வருதுன்னா அவங்களுக்கு எக்கச்சக்க சந்தோஷம்...''

முத்துப்பாண்டியன் சிரித்தார்.

''உன்னுடைய யதார்த்தமான பேச்சு எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. நான் உங்கள் காதலை அங்கீகரிக்கிறேன். உங்கள் இருவருக்கும் விரைவில் திருமணம் நடத்த ஏற்பாடு செய்கிறேன். நீ உங்க அப்பா அம்மாவை அழைத்து வா பேசலாம் ..''

''தாங்க்ஸ் சார்...''

''தாங்க்ஸ் அங்கிள்னு சொல்லு. யாழினி! சந்தோஷமா?''

யாழினி அப்பாவைக் கட்டிக் கொண்டு கன்னத்தில் முத்தமிட்டாள்.

''தாங்க்யூ டாட்!''

சமையல் அறையிலிருந்து அம்மா வந்தாள். இளஞ்சேரனை உறுத்தபடி வந்தாள். அப்பா, பொண்ணே முடிவு பண்ணீட்டீங்க. இந்த வீட்டுல என் யோசனையை யாரும் கேக்கறதே இல்லை..,''

''சரி உன் யோசனை என்ன விசாலினி?''

''டபுள் சம்மதம்...''

எல்லாரும் சிரித்தனர்.

புதலிரவு கட்டிலில் அமர்ந்தான் இளஞ்சேரன். தோளில் பெரிய ஈகிள் பிளாஸ்க் மாட்டிக்கொண்டு உள்ளே

வந்தாள் யாழினி.

''பால் எங்கே யாழினி?''

''ராத்திரி பூராவும் முழிச்சுக்கிட்டு இருக்கணும்னு பிளாஸ்க் நிறைய ஸ்ட்ராங்கா டீ போட்டு கொண்டாந்திருக்கேன் ..''

''நல்ல ஐடியாதாள். உக்காரு ..''

உட்கார்ந்தாள் யாழினி.

''எனக்கொரு சந்தேகம் ..''

''கேளு!''

''அப்பாகிட்ட சொன்னீங்களே. ஆறு பொண்ணுங்களை லவ் பண்ணதா. அது ரீல் தானே?''

''சேச்சே! அது உண்மைதான். கணக்குதான் தப்பு. இன்னும் ரெண்டு பேர் இருக்காங்க. மறந்துட்டேன்...''

''பேசினதோட சரிதான? வேற ஒண்ணுமில்லையே?''

''அதுவா? மூணு பொண்ணுககிட்ட நெருங்கி பழகிட்டேன். மத்தது கிட்ட முடியல...''

யாழினி இறுகினாள்.

''டாமிட்! இதைச் சொல்ல உங்களுக்கு வெக்கமாயில்ல?''

''இல்ல...பெருமையா இருக்கு!''

''பெருமையா? உங்க தலை மேல இடி விழ!''

''இடி விழுந்தா நீ விதவை ஆயிடுவ ..''

''அதிகம் பேசாதீங்க...''

''நீதான் அதிகம் பேச வைக்கிற!''

''இனிமே எந்த பொம்பளைக் கிட்டயாவது பல் இளிச்சு பேசிட்டு இருந்தீங்க கன்னம் கன்னமா அறைசுஞ் இழுத்துடுவேன்...''

''பேசுறத தடுக்க மனைவிக்கு உரிமை இல்லை...''

''ஏன் இல்லை? நல்லாவே இருக்கு. நீங்க அழகா ஆண்மையாக் இருக்கிற திமிர், பொம்பளைகளை வலை வீசி இழுக்கச் சொல்லுது...''

''அதிகம் பேசுற யாழினி. இன்னைக்கி நமக்கு முதலிரவு. நம்ம ஈகோ கிளாஸ் எல்லாம் பின்னாடி வச்சுப்போம். வா இந்த இரவை இனிப்பாக்கு!''

''ஏன் அய்யாவுக்கு ரொம்ப அவசரமோ?''

''அவசரம்தான்!''

''இதுக்குதான் என்னக் காதலிச்சீங்களா?''

''இதுக்கும்தான்...''

''இன்னைக்கி எனக்கு எரிச்சலா வருது. மூடு வர்றப்ப பாத்துக்கலாம்...''

''யாழி! கோடி வரலாம் போகலாம். ஆனால், முதலிரவு நாள் திரும்ப வரவே வராது...''

''டோன்ட் பி பெனடிக்''

''இப்ப நீ வரலை. அப்படித் தானே?''

''ஆமா...''

''சரி படுத்துக்க...''

இருவரும் வெவ்வேறு திசை பார்த்தபடி ஒரே படுக்கையில் படுத்துக்கொண்டனர். நேரம் சிறிது சிறிதாய்

கரைந்தது. தேவைக்கு அதிகமாய் இளஞ்சேரனை கடிந்து கொண்டோமோ? அவனின் ஆண் சாகசத்தை நிறுத்த ஆயிரம் வழிகள் உள்ளன. அவைகளை கடைபிடிப்போம். இப்போது அவனுக்கு உரிமையானதை கொடுப்போம்.

அவன் பக்கம் திரும்பிப் படுத்தாள். சுவாசிக்கும் அவனது அகல முதுகு தெரிந்தது. பின்னங்கழுத்தில் ரோமச் சுருள்கள் அழகாய்...மெதுவாக கையைக் கொண்டு சென்று அவனைத் தொட்டாள்.

''இளஞ்சேரன்!''

பதில் இல்லை.

''இ-ள-ஞ்-சே-ர-ன்!''

அவனும் திரும்பினான். ''என்ன''

''கோபமா?''

''இல்லையே!''

''பொய் சொல்றீங்க. இனி பொம்பளைங்ககிட்ட தள்ளி நின்னே பழகுங்க...''

இளஞ்சேரனை மயக்கும் விழிகளால் பார்த்தாள்.

''நீ என்னை எழுப்புவன்னு தெரியும். எதை வேணாம்னு சொன்னியோ அதுஉனக்குதேவை.அதுக்குத் தான் சமாதானம் பேசி நெருங்கிவர. இல்லையா யாழி?''

யாழினி ஸ்தம்பித்தாள். 'சீ' என அவனை உதறித் தள்ளினாள்.

''சே! எவ்வளவு மோசமா பேசுறீங்க!''

ஈகோ போர் ஆரம்பித்தது.

3

அடுத்த ஆறு மாதங்களில் ஈகோ போர் வலுவடைந்தது. விட்டுக் கொடுக்கும் மனநிலையில் யாழினியோ இளஞ்சேரனோ இல்லை. வாத்தைக்கு வார்த்தை பதிலடி.

''நான் ஒரு பெரிய தப்பு பண்ணிட்டேன்!''

''ஒத்துக்கிட்டா சரி!''

''திமிர் ஆணும் திமிர் பெண்ணும் ஜோடி சேர்ந்தால் இனிக்கும் என நினைத்தேன். தப்பு. மகா தப்பு. ஈராக்" அமெரிக்கா ஆகிப்போனோம். இன்னொரு டாக்டரை கல்யாணம் பண்ணியிருந்தா தனியா கிளினிக் வச்சு சேமமா இருந்திருக்கலாம்...''

''நாங்கூட தப்பு பண்ணிட்டேன். என் துறையிலயே பொண்ணு பார்த்திருக்கலாம் ..''

''ரெண்டு பேருமே நம்ம கல்யாணம் தப்புன்றோம். அப்படின்னா அந்த முடிவுக்கு வரவேண்டியது தான்...''

''என்ன முடிவு?''

''டைவர்ஸ்தான் சிறந்த வழி!''

இதயத்தை அட்டைப் பூச்சி உறிஞ்சியது.

''வேண்டாம் யாழினி! நல்லா யோசிச்சு பாரு...''

''தீர்க்கமா யோசிச்சிட்டேன்.உடனடியாக டைவர்ஸ்க்கான ஏற்பாடுகளை கவனியுங்க...''

எதுக்கும் உங்க அம்மா அப்பவை...?''

''எதுக்கு? அவங்களை கேட்டா உங்களை காதலிச்சேன். நான் சொல்றது தான் இறுதி முடிவு ..''

''ப்ளீஸ்! முடிவை மறுபரிசீலனை செய்!''

''நோ. ஏதாவது முரண்டு பண்ணுணீங்கதற். கொலை பண்ணிப்பேன். ஐ வாண்ட் டைவர்ஸ்...''

இளஞ்சேரன் நெட்டுயிர்த்தான். அழுகையை மறைத்தான்.

''ஓகே. உடனே வக்கீலை கன்சல்ட் பண்றேன்...''

''நன்றி!''

''அதுவரை இங்கேயே இரேன்...''

''சேச்சே! இந்த நகரத்துல யார் இருப்பா? நான் என் பேரண்ட்ஸ் வீட்டுக்கு போறேன்...''

பெரிய விஐபி சூட்கேசை விரித்துப் போட்டாள். தன்னுடைய துணிமணிகள் அனைத்தையும் கொத்தாய் அள்ளி நிறைத்தாள். இடையில் சிக்கிய இளஞ்சேரன் உள்ளாடையை தூர வீசினாள்.

'புருசனே வேணாம்னு ஆச்சு! அவன் துணிமணி ஒட்டி வருதோ?'

கனமான சூட்கேசை தரதரவென இழுத்துக்கொண்டுக் காருக்கு நடந்தாள் யாழினி. கூடவே ஓடி வந்தான் இளஞ்சேரன் காரை கிளப்பினாள். டாட்டா காட்டினாள். 'கோடுஹெல்' என்றாள். கார் எப்டைப் குவார்ட்டர்ஸ்க் குள் நுழைந்தது.

முத்துப்பாண்டியன் இல்லஸ்டிரேட்டட் வீக்லி படித்துக் கொண்டிருந்தார். கனத்த சூட்கேஸ் உடன் மகள் யாழினி வருவதை கண்டும் காணாமல் புத்தகத்தில் கண்களை பதித்தார்.

''அப்பா!'' ஓடிவந்து சூட்கேசை தவறவிட்டு கட்டிக் கொண்டாள் யாழினி. ''தப்புப் பண்ணிட்டேன்ப்பா.

அவசரப்பட்டுட்டேன்ம்பா. வாழ்க்கைத்துணையை தேர்ந் தெடுத்ததில் மிகப்பெரிய பிளண்டர் பண்ணிட்டேன். எல்லாம் உங்களாலதாம்பா...''

அப்பாவின் பின் வந்து நின்றாள் அம்மா.

''நான் என்னம்மா பண்ணினேன்?''

''காதல் கத்தரிக்காய்னு மக ஒருத்தனை கூட்டிட்டு வந்தா கண்ண மூடிக்கிட்டு இப்படியா ஒப்புதல் அளிக் கிறது? பொண்ணுக்கு மாப்பிள்ளை தகுதியானவனான்னு கணிக்க தவறிட்டீங்க ..''

''என்னைப் பொறுத்த வரைக்கும் இளஞ்சேரன் நல்லவர்தான்..''

''அப்படின்னா நான் மோசமா?''

''உங்க இருவரிடையே ஆச்சுவலா என்ன நடந்த துன்னு தெரிஞ்சுகிட்டாதான தீர்ப்பு சொல்ல முடியும்?''

''இளஞ்சேரனும் தேளும் ஒண்ணு. தேளாவது தன்னை தொந்திரவு பண்றவங்களைத் தான் கொட்டும். ஆனா இவன்..''

''அப்படி என்னம்மா தப்பு பண்ணார்? குடிக்கிறாரா, ரேஸ்போறாரா, வேறு பொண்ணு தொடர்பு இருக்கா ..''?

''நான் விளக்கிச் சொலல தயாராயில்லை. அவனை எனக்கு புடிக்கல. டைவர்ஸ் பண்ணணும்!''

''இறுதி முடிவு!''

''உன் வாழ்க்கையை வீணா கெடுத்துக்கிற!''

''நீங்களும் ஆண் வர்க்கம் தானே? இப்படித்தான் பேசுவீங்க. டைவர்சுன்னா நரகவாசியா? ஆண் துணை

இல்லாமல் என்னால் சந்தோஷமாய் வாழமுடியும். இந்தியப் பெண்களில் 90 சதவீதம் பேர் பொருளாதார ரீதியாக தனியே ஜீவிக்க வழியில்லாமல் கொடுமைக்கார புருசனை சகித்துக் கொள்கிறார்கள். பட், நான் ஒரு டாக்டர். நான் யாரையும் டிபன்ட் பண்ண வேண்டிய தில்லை. நீங்க எனக்கு புகலிடம் தராவிட்டால் நான் வெளியே போய் தங்கிக் கொள்கிறேன்...''

அம்மா அழுதாள்.

''ஏம்மா இப்படி பேசுற? உன் சந்தோஷமே எங்கள் சந்தோஷம். நீ என்ன முடிவெடுத்தாலும் எங்களுக்கு சம்மதமே. நாங்க ரெண்டு பேரும் உயிரோட இருக்ற வரைக்கும் நீ வெளியே தங்கவேண்டிய அவசியம் இராது...''

''நான் மேல டிசிஹெச் படிக்கப் போறேன். இனி என் முழு கவனமும் படிப்பில்...''

யாழினியை கனிவாய் பார்த்தார் நீதிபதி.

''நீ ஏன்ம்மா ஜீவனாம்சம் கோரவில்லை?''

''அந்த ஆசாமியின் பாவப்பட்ட பணம் எனக்குத் தேவையில்லை. என் சம்பாத்தியம் நூறு ஆட்களுக்கு சோறுபோட போதுமானது!''

''வேறு என்னதான் மிஸ்டர் இளஞ்சேரனிடமிருந்து எதிர் பார்க்கிறீர்கள்?''

''அதுவா! ஒரே ஒரு ஆசை!''

''என்ன?''

''ஆறுமாதங்கள் என்னை வார்த்தைகளாலே கடித்துக் குதறிய இளஞ்சேரனை உங்க முன்னிலையில் நாலு அறை அறைய வேண்டும். அது போதும் எனக்கு. அந்த

அவமானம் காலம் பூராவும் இளஞ்சேரனை உறுத்த வேண்டும்.

திகைத்தார் நீதிபதி. இளஞ்சேரனை பார்த்தார்.

''தாராளமா அறையச் சொல்லுங்க. அவசரப்பட்டு ஒரு திமிர்பிடித்தவளை கல்யாணம் பண்ணினகுற்றத்துக்கு தண்டனை அவசியம் தான்...''

கோர்ட்டே திகைக்க யாழினி இளஞ்சேரனை நோக்கி நடந்து வந்தாள். ஆக்ரோஷமாய் பெண்புலி சீறலாய் கன்னத்தில் அறைந்தாள்.

இளஞ்சேரன் அவமானத்தில் குன்றினான்.

நீதிபதி அடுத்த வாய்தா தேதியை கூறிவிட்டு அடுத்த கேஸ்க்குள் நுழைந்தார்.

''யாழினி! யாழினி! யாழினி!''

''என்னப்பா?''

''கன்கிராட்ஸ். உனக்கும் இளஞ்சேரனுக்கும் டைவர்ஸ் சட்டப்பூர்வமா கோர்ட் குடுத்திருச்சு!''

யாழினியின் இதயத்தில் ஏதோ வலி உணர்ச்சி. கோர்ட்டில் தான் அறைந்ததை மவுனமாகப் பெற்றுக் கொண்ட இளஞ்சேரன் ஞாபகத்துக்கு வந்தான்.

''கோர்ட் ஆர்டர் பார்க்கறியா?''

''சேச்சே! சனியனை போய் பார்த்துகிட்டு. பீரோல மூலைல போட்டு வைங்க. அப்பாடா! ஒரு கவலை விட்டுச்சு ''

''இளஞ்சேரனுக்கு ஆர்டர் இஷ்யு ஆயிடுச்சு. வாங்கிட்டு அவர் தன்னோட ஊர் ஜாம்செட்பூருக்கு புறப்பட்டுட்டார். ஜியோ பிசிக்சில் மேற்படிப்பு படிக்கப் போகிறாராம் ..''

''தொலையட்டும்...''

''யாழினி!''

''என்னப்பா?''

''உனக்கு வேறொரு மாப்பிள்ளை பார்க்கட்டுமா?''

''இன்னொரு பிளண்ட்ரா? நோ. அப்பா! லீவ் மீ அலோன். இந்த ஆம்பிளை மொட்டைப் பசங்க துணை இல்லாமயே வாழ்ந்துடுறேன்...''

''எங்க விருப்பத்துக்காகவாவது?''

''காலம் கனியட்டும் பார்ப்போம்...'' என்றாள்.

''யாழி!'' மீண்டும் அழைத்தான் இளஞ்சேரன்.

முத்துப்பாண்டியன் மெதுவாக மகளின் கையை அழுக்கி நிகழ்காலத்துக்கு கொண்டு வந்தார். ''அம்மா என்னம்மா இப்படி மலைச்சுப் போயிட்ட?'' கிசுகிசுத்தார்.

''ஓ-ஒண்ணுமில்லைப்பா ..''

நக்கலாய் கண்களை குறுக்கி சிரித்தான் இளஞ்சேரன்

''என்ன யாழி! பழைய நினைவுகளை கண்களில் ஊர்வலம் போகுதோ? ஸ்தம்பித்து நிக்கிற?''

''மிஸ்டர் இளஞ்சேரன்! பழைய நினைவுகள் நான் எப்பவும் நினைச்சுப் பாக்கறதில்லை. குறிப்பாக உங்க சம்பந்தப்பட்ட நினைவுகளை ..''

''பொய் பொய் சொல்ற யாழி!''

அப்பா, இருவரும் பேசட்டும் என்று நினைத்து விலகி வேறு நண்பர்களுடன் பேச போய் விட்டார்.

''யாழின்னு கூப்பிடாதீங்க. ஐ ஹேட் இட். முழுப் பெயரை வச்சு கூப்பிடுங்க...''

''அப்படியே செய்கிறேன்...''

''நடிக்காதீங்க... திரும்ப எதுக்கு நெய்வேலி வந்தீங்க?''

''நானா வந்தேன்? கார்பரேஷன்ல கூப்பிட்டாங்க வந்தேன்!''

''எவ்வளவு நாள் இருப்பீங்க இங்க?''

''வந்த வேலை முடியற வரைக்கும்...''

'இரட்டை அர்த்தத்தில் சொல்கிறானோ? எந்த வேலை!'

''எந்த வேலை முடியற வரைக்கும்?''

''ச்ச. பயந்துட்டியா? புது மைன்ஸ் ஓபன் பண்ற வரைக்கும்!''

''புதுசா குடிப்பழக்கம் வந்துட்டுது போல...''

''சும்மா அப்பப்ப!''

''கேசுவலா விசாரிச்சேன் அவ்வளவுதான். நீங்க பாட்டுக்கு ஏதாவது கற்பனை பண்ணிக்காதீங்க .''

''உன்னுடைய ஆணவமும் திமிரும் சற்றும் குறையவில்லை.''

''உங்களுக்கே துளியும் குறையவில்லை. பின்னெப்படி எனக்கு?''

''யாழி! சாரி... யாழினி! திரும்பவும் நாம ஆறு வருச இடைவெளிக்குப் பின் விவாதம் பண்ணிக்கணுமா?'' நெருங்கினான். அவனின் வியர்வை நாசியை தாக்கியது. ''நாம தொடர்ந்து நல்ல நண்பர்களாய் இருந்தால் என்ன?''

''நம்மால் ஈவன் ப்ரண்ட்ஷிப்பாக் கூட இருக்க முடியுமா?''

''ஏன் முடியாது? கொஞ்சம் நாகரிகமாக நாம ஒருத்த ருக்கு ஒருத்தர் நடந்துகிட்டா ஏன் முடியாது? நட்புக்கு மேல 'வேற' எதுவும் நினைக்காம?'' கடைசி வாக்கி யத்தை உணர்ச்சி கரைந்து ஹஸ்கியாய் சொன்னான்.

தொண்டையில் சுவாசம் பந்த் பண்ணியது. அவனு டைய வார்த்தையிலிருந்த அன்னியோன்யம் அவளை நிலைகுலைய வைத்தது.

''உங்கள் வார்த்தைகளில் நரித்தனம் விளையாடு கிறது. ஸ்டுப்பிட் இளஞ்சேரன்!''

''நான் என்ன சொன்னேன்னு இப்படி குதிக்கிற?'

''வெறும் பார்மாலிட்டிக்காக பேசினால் அதிகப் பிர சங்கித்தனம் பண்றீங்க! நான் என் அறைக்கு போகி றேன் '' விறைப்பாய் யாழினி திரும்பி தன் அறைக்கு ஓடினாள். படுக்கையில் குப்புற படுத்துக் கொண்டு விசும்பி விசும்பி அழுதாள். மகள் அழுவதை கதவு திறந்து கவனித்தாள் யாழினியின் அம்மா.

டைனிங் டேபிள். டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்த முத்துப்பாண்டியன் மகளைப் பார்த்ததும் எரிச்சல் முகம் கொண்டார்.

''நேத்து பார்ட்டிக்கு வரமாட்டேன்னுட்டு எதுக்கு வந்த? வந்தது சரி, வந்துட்டு ஏன் பாதில ரூமுக்கு ஓடுற? எனக்கு ரொம்ப அவமானமா போச்சு- பாவம் இளஞ் சேரன்! அவர் முகத்துல ஈயாடல...''

''நான் நேத்து நடந்தது உங்களுக்கு சங்கடமா இருந்தா சாரிப்பா . '' அப்பாவை கட்டிக்கொண்டு நெற்றி யில் முத்தமிட்டாள்.

வாசலில் கார் பிரேக்கிடும் சப்தம் கேட்டது. கார் கதவை திறந்து கொண்டு வெளிப்பட்டான் இளஞ்சேரன்.

வெள்ளை நிற ஜீன்சும், பச்சை நிற பூக்களும் 'ஐ எம் பார் யூ!' வாசகங் கொண்ட டி சர்ட்டும் அணிந்திருந்தான். காலில் பார்க் அவின்யூ ஷூ. இடது கையில் மோவாடோ கடிகாரம். முகத்தில் ரேபான் குளிர் கண்ணாடி.

அவனை பார்த்ததும் முத்துப் பாண்டியன் வரவேற் றார்.

''வாங்க மிஸ்டர் இளஞ்சேரன்! நேத்து நடந்த நிகழ்ச் சிக்கு . ''

''இட்ஸ் ஆல் ரைட்!'' யாழினி பக்கம் திரும்பி சொன்னான்.''

''பேசிக்கிட்டு இருங்க. நான் புறப்படுறேன்...' எழுந்து கைகழுவி விட்டு புறப்பட்டார்.

அவர் போகும் வரை காத்திருந்து யாழினியிடம் திரும் பினான் இளஞ்சேரன். மஞ்சளும் சிவப்பும் டைமன் வடிவில் டிசைனாய் கொண்ட அஞ்சலி சேலை அணிந்திருந்தாள். மேட்சிங் ஜாக்கெட்டில் தோள் பட்டையில் சிறிதாய் புஷ்கை. ஷாம்பு இடப்பட்ட தலை பொசபொசப்பாய்.

இளஞ்சேரனின் பார்வை தன்னை துளைப்பதாய் உணர்ந்தாள் யாழினி. தன்னுடைய ஆடைகளை ஆவேச மாய் உரியும் சாகசம் தெறித்தது அவன் பார்வையில். நெளிந்தாள். அவளின் அவஸ்தை அவனுக்கு சந்தோஷம் கொடுப்பதை உணர்ந்தாள். 'அடப்பாவி'!

''என்னை திரும்ப திரும்ப சந்திக்கிறது உனக்கு எரிச்சலா இருக்கா...?''

''ஆமா ஆமா...''

''உன்னை மயக்கிடுவேன்னு பயமா இருக்கா?''

''சேச்சே. அப்படியெல்லாம் இல்ல ..உங்களோட பேசற நேரத்துல வேற உபயோகமான வேலை பாக்கலாம்னு நினைக்கிறேன்...''

விருட்டென்று யாழினி கைகளை பிடித்தான். ''இதா பாரு யாழினி! நான் விரும்பறது எல்லாம் உன் நட்பு மட்டும்தான்..''

''நம்ம நேரமெல்லாம் எப்பயோ முடிஞ்சிருச்சு. நான் இறந்த காலத்தை நிகழ்காலத்துக்கு கொண்டுவர விரும்பவில்லை.

''அப்ப நான் யூகிச்சது கரெக்ட்!''

''என்ன யூகிச்சீங்க?''

''உன் வாழ்க்கையில புதுசா யாராவது?''

''ஆமா, அதுக்கென்ன?'' கத்தியால் குத்தும்பார்வை பார்த்தாள்.

''யாரந்த மரியாதைக்குரிய நபர்?''

''உங்களுக்கு அவசியமில்லாதது!''

''ஏன் சொன்னா, அவர் மனசை நான் கலைச்சிடுவேன்னு பயமா?''

''அவர் தங்கமானவர். உங்கள் நரிக்குணம் புரிந்தவர். கடவுள் வந்தாலும் அவரை கலைக்க முடியாது...''

''அப்ப சொல்!''

''என்னுடன் அரசு மருத்துவமனையில் பணிபுரியும் டாக்டர் நாகதேவ் தான்..''

நாகதேவ் என்றதும் இளஞ்சேரனுள் இடி விழுந்தது. நத்தையாய் சுருங்கினான்.

4

''ஓ நாகதேவ்வா? ஆர்த்தோ பீடியாட்ரிக் தானே?''

''ஆமா. அவரை உங்களுக்கெப்டி தெரியும்?''

''படிக்கும்போது யுனிவர்சிடில பார்த்திருக்கேன்...''

''யாழினி! நாகதேவ்வை நம்பாத. அவன் அவ்ளவு நல்லவனில்லை..''

''அப்டியா? பரவாயில்ல...''

''எதற்கும் யோசி. இன்னொரு தோல்வியை தாங்க மாட்டாய்..''

''அறிவுரைக்கு நன்றி..''

''அதுகிடக்கட்டும். ஒரு விண்ணப்பம்...''

''என்ன?''

''சீக்கிரமே நாகதேவை திருமணம் செய்து கொள்ளப் போகிறாய். அப்றம் இப்டி நான் சுதந்திரமாக வந்து பேச முடியாது. நாம ஒரு ஆறு மாசம் சேந்து வாழ்ந்தோமே - அதன் பொருட்டு நாளைக்கி ஈவினிங் என் வீட்டுக்கு வந்து விருந்து சாப்ட்டுட்டு போயேன்...''

''முடியாது ''

''அதனாலென்ன பிரச்சனை உனக்கு?''

''நாளைக்கி கிளினிக்ல நிறைய வேலை இருக்கு''

''நாளைக்கு வேணாம். நாளை மறுநாள்...''

''அன்னைக்கும் எனக்கு வேலை இருக்கு''

''ரொம்ப பொய் பேசுற யாழினி! அதற்கடுத்த நாள் வரியா?''

''ப்ளீஸ்! என்னை விட்டுடுங்க. எனக்கு ..''

''நீ வர மாட்டேன்னு மறுக்கிறதுக்கு முன்னாடி - என்ன காரணத்துக்காக வரமாட்டங்கிறத சொல்லிடு. ஒரே ஒரு தடவை என் கூட விருந்து சாப்ட்டேன்னு வச்சுக்க - பழைய கசப்புகளை களைஞ்சிட்டு நல்ல நண்பர் களாக நிரந்தரமா பிரிஞ்சுடலாம். சத்தியமா சொல்ரேன் வேறேதும் உள் நோக்கம் இல்லை யாழினி!''

'இவ்வளவு சொல்கிறான். இதில் எதுவும் தெந்திரவு இருக்காது. இவனிடமிருந்து நிரந்தரமாக விலக சிறு விலை கொடுப்போம்.'

''விருந்து சாப்ட்டுதான் நாம இரண்டாவது தடவை விலகணும்னா ஐ எம் ரெடி. புதன் கிழனை வரேன்...''

''ச். நிஜமாவே என்னை வெறுக்ற இல்ல!''

''பழகினவங்க சுயரூபம் தெரிஞ்சா வெறுக்கதானே வேணும்? சில விஷயத்ல நீங்க பாஸிடிவ்வா மாறி இருக் கீங்க. இப்ப என்ன பண்ண?''

''மனிதன் ஒரே மாதிரி இருக்க மாட்டான் யாழினி. ஆறு வருடங்கள் என்ன நிறைய மாற்றியுள்ளன. வண்ணக்கனவுகளில் மிதந்த இளஞ்சேரன் இறந்து விட்டான்...''

''சந்தோஷம்!''

''புதன்கிழமை சந்திப்போம். நான் வருகிறேன்...''

அவளிடமிருந்து விலகி நடந்தான். அவன் போன வுடன் தான் டென்ஷன் விடுபட்டாள் யாழினி. உள்ளங் கை மரமரத்திருந்தது. 'இவனைக் கண்டு ஏன் இவ்வளவு பயப்படுகிறோம்?'

மார்கெட் போய் திரும்பிய அம்மா காரை நிறுத்தி இறங்கினாள். அம்மாவுக்கு தானே போய் காய்கறி வாங்கி வந்தால் தான் திருப்தி.

''யாழினி! இளஞ்சேரன் வந்துட்டுப்போரார் போல?''

''ஆமா...சும்மா கேசுவலா பேசுனோம்...''

அம்மா பதில் பேசாமல் உள்ளே போனாள்.

நாகதேவ், ''ஹல்லோ யாழினி!'' என்றான்.

''ஹலோ நாகதேவ்!''

''வாங்களேன்...அந்த மரத்தடில உக்காந்து பேசுவோம்...'' இருவரும் அமர்ந்தனர்.

''ஆங்'' கேக்கணும் கேக்கணும் நினைச்சேன். இளஞ்சேரனை அப்றம் பாத்தீங்களா?''

''பாத்தேன். ஆமா, உங்களை அவனுக்கு தெரியு மாமே? ஏன் சொல்லல நீங்க?''

''முக்யம்னு நினைக்கல சொல்லல...''

''நான் அவனை பாத்தேன். பேசினேன், அவனோட புதன் கிழமை மாலை விருந்து சாப்ட போகிறேன். அழைத் திருக்கிறான்...''

இருண்டான் நாகதேவ்.

''விஷயம் அதுவரைக்கும் முன்னேறிடுச்சா?''

''முன்னேறவும் இல்லை, கின்னேறவும் இல்லை. சும்மா பழைய பழக்க நன்மைக்காக. அவ்வளவுதான்...''

''ஓஹோ அப்படியா?'' எரிச்சல் கலந்திருந்தது.

''நல்லா கவனிங்க நாகதேவ். இளஞ்சேரனுடன் எனக்கு நடந்த திருமணம் முறிந்துவிட்டது. திரும்பவும் இடைவெளியை இட்டு நிரப்ப நான் தயாரில்லை...''

''என்னை ஏமாத்திடாதிங்க யாழினி. நான் உங்களுக்கு அடங்கின புருஷனா நடந்துக்குவேன்...''

''எனக்கு நல்லா தெரியும் .''

''அப்றம் ஏன் காலத்தை கடத்துறீங்க? உடனே தலையாட்டுங்க. அடுத்த வாரமே சிம்பிளா கல்யாணம் வச்சிப் போம்...''

''அதுல ஒண்ணும் மாறுதலில்லை. வெகு சீக்கிரம் தேதி சொல்கிறேன்''

வீட்டுக்குப் புறப்பட்டாள். படுக்கையில் படுத்ததும் தூக்கம் வரவில்லை. 'மிக நிச்சயம் நமக்கு நாகதேவ் நல்ல புருஷனா இருப்பான் சந்தேகமேயில்லை. பின்னே எதுக்கு குழம்புகிறோம்? நாகதேவ்வை திருமணம் செய்து கொள்ள தேவையான அளவுக்கு அன்பு செலுத்தத்தான் செய்கிறோம்.' இளஞ்சேரன் மனதில் வந்து நக்கலாய் சிரித்து நின்றான். விரட்ட முயன்றாள். போகமறுத்தான்! என்னை மறந்துவிடமுடியுமா என நக்கல் செய்தான். அவனுடன்இருந்த காதல் இரவுகள் உணர்வில் மிதந்தன. உடலில் ரத்த ஓட்டம் தொம் தொம் என்றது. 'சே! ரொம்ப பைத்தியக்கார தனமாய் நடந்து கொள்கிறோம். தேவையில்லாமல் இளஞ்சேரனை நினைக்கிறோம்.'

நைட்டியுடன் கீழே சமையலறைக்கு நடந்தாள். மணி நள்ளிரவு இரண்டு பாலை திரும்பக் கொதிக்க வைத்து ஒரு டம்ளர் நிறைத்தாள். பால் உறிஞ்சும் சமயம் தூக்கக் கலக்கத்துடன் அப்பா வந்தார்.

''என்னம்மா அதிசயமா நடுராத்திரில?''

''ஒரே குழப்பம்பா. நாகதேவ் திருமணதேதி சொல்லச் சொல்லி நச்சரிக்கிறார்!''

''திரும்பவுமா?''

''ஆமாப்பா ..''

''நாகதேவ் நல்ல பையன் தான். நீ என்ன சொன்ன?''

''சீக்கிரம் சொல்றேன்னு சொல்லிருக்கேன்...''

''உன் முடிவே எங்க முடிவம்மா. திரும்பவும் நீயும் இளஞ்சேரனும் ஒண்ணு சேர சான்ஸ் இல்லையாம்மா?''

''நிச்சயம் இல்லைப்பா...''

''நடுராத்திரில அப்பனும் மகளும் விவாதம் பண்றது வித்தியாசமா இல்ல? நீ போய் படும்மா. குட்நைட் யாழினி...''

காலையில் எழுந்தபோது தலை கனத்தது. தொடர்ந்து இரு நாட்களும் தலைவலிதான். புதன்கிழமை காலையிலிருந்து டென்ஷனாய் இருந்தாள் யாழினி. இன்னைக்கி சாயங்காலம் இளஞ்சேரனுடன் பல மணி நேரம் இருந்தாக வேண்டும். தேவையா அது?

ஒரு முடிவுக்கு வந்தாள். இளஞ்சேரனின் அலுவலகத்துக்கு போன் செய்தாள். எதிர்முனையில் ஆபரேட்டர் கிடைத்தாள். பலமுறை போன் பண்ணியும் ஒரே பதில்.

''சார் இல்லை. சைட் இன்ஸ்பெக்ஷன் போயிருக்கார்...''

'போய் தொலைக்க வேண்டியதுதான் போல விருந்துக்கு'.

சுடிதார் அணிந்து கொண்டாள். கால்களில் ஹீல்ஸ், தோளில் லேடீஸ் பேக். புறப்படும் நேரத்தில் அம்மா குறுக்கிட்டாள்.

''யாழினி! நீ எங்க போறன்னு எனக்கு தெரியும் - இளஞ்சேரனோட கடைசி விருந்து சாம்பிட...''

''தப்பாம்மா?''

''திரும்பவும் உறவு தொடருது இல்ல?''

''உளறாதிங்கம்மா...''

''ஏதோ கேக்கணும்னு நினைச்சேன் கேட்டேன். தப்புன்னா மன்னிச்சுடும்மா...''

''பெத்த அம்மா கேக்காம வேற யாரம்மா கேப்பா? இளஞ்சேரனோட கட்டாயத்தல விருந்துக்கு போற எரிச்சல்ல உளறாதிங்கம்மானுட்டேன்...''

''யாழினி!'' பெருமூச்சு விட்டாள் அம்மா. ''நீ திரும்ப கல்யாணம் பண்ணிப்பியோ தனியா நிப்பியோ அது என் பிரச்சனை இல்லை. எந்த முடிவு எடுத்தாலும் சீக்கிரம் எடு. ஏதாவது ஒரு பக்கம் நில்லு...''

''இப்ப எதுக்கம்மா கல்யாணத்த பத்தி பேசுர?''

''மனசுல பட்டுச்சு சொன்னேன்...''

ஒண்ணும் பேசாமல் யாழினி வாசலுக்கு நடந்தாள். அதே கனம் இளஞ்சேரனின் கார் உள்ளே நுழைந்தது. கார் உள்ளேயே அமர்ந்தபடி பின் கதவின் லாக்கை விடுவித்தான். ஒன்றும் சொல்லாமல் அமர்ந்து கொண்டாள். காரை செலுத்தினான். பின்னாடியிருந்து அவனை, அவனறியாமல் கவனிக்க இரகசிய ஆர்வம் வந்தது. அவனுடன் தான் இருக்கும் போதெல்லாம் ஒரு விசித்திர விளைவை தன்னுள் கண்டாள் - ஆறு வருடம் கழிந்த பின்பும், ஆனாலும் அந்த உணர்வுகளை எதிர்த்துப் போரிட உறுதிகொண்டான்.

''நான் உங்களுடன் தொடர்பு கொள்ள எட்டு முறை தொலைபேசியில் முயன்றேன்...''

சிரித்தான் இளஞ்சேரன்.

''எட்டுத் தடவையும் நான் அலுவலத்தில் தான் இருந்தேன்''

''ஆபரேட்டர் சொன்னாளே!''

''ஆபரேட்டர் எனக்காக எதுவேண்டுமானாலும் செய்வாள்...'' இரட்டை அர்த்த தொனி.

''என்ன சொல்றீங்க, புரியல...''

''நான் தான் பொய் சொல்லச் சொன்னேன்...''

''உங்க கழுத புத்தி மாறலியே?''

''கோச்சுக்காத நீ ஏதாவது சாக்கு போக்கு சொல்லி விருந்துக்கு வரத கான்சல் பண்ணாலும் பண்ணுவன்னு யூகிச்சேன். கொஞ்ச நாளு உன் கூட வாழ்ந்தவனில்லையா? அதான் ஆபரேட்டர்கிட்ட பொய் சொல்ல சொன்னேன்...''

யாழினி கோபத்தில் கொதித்தாள்.

''நான் கான்சல் பண்ண நினைச்சதுக்கு காரணமிருக்கு''

''என்ன காரணம்?''

''அதான் நானே வந்துட்டேனே...சீக்கிரம் என்னை அனுப்பிடுங்க...''

''இறுக்கமாவே இருந்து விருந்தை இரங்கல் கூட்டமா ஆக்கிடமாட்டன்னு நம்புரேன்...''

''உங்கள பத்திதான் அப்டி கவலைப்படுரேன்...''

''கவலை வேண்டாம். நீ பாராட்டும்படி நடந்து கொள்ளுவேன்...''

அடுத்து பத்து நிமிடம் அவனுடைய குவார்ட்டர்ஸ் போய் இறங்கும் வரை இருவரும் பேசிக்கொள்ளவில்லை. மேஜையில் தயார் நிலையில் உணவு அயிட்டங்கள், சமையல்காரிக்கு பணம் கொடுத்து அனுப்பினான் இளஞ் சேரன்.

''இந்த விருந்தொன்னும் சரித்திர முக்யமில்லை...''

''என்ன அப்டிச் சொல்ற? ஆறு வருஷத்துக்குப்பின் ஒண்ணா நாம சாப்டுறது சரித்திர முக்யம்தான்...''

''இந்த விருந்தால உங்களுக்கென்ன லாபம்?''

''வேற ஒண்ணுமில்லை. என் மாஜி மனைவிக்கு நாம விரோதி அல்ல நண்பர்கள் என்று நிரூபிக்க..''

''எப்டியோ நம் வழி இரண்டும் தனித்தனியா அடைக்கப்பட்டா சரி...''

''ஏன் நாகதேவ் பொறாமைப்படுரானா?''

''நாகதேவ் ஒண்ணும் பொறாமைப்படல...''

''நீ அவனை காதலிக்கலையா?''

''இல்லை...''

''பின்ன? அவனை கல்யாணம் பண்ணிக்கப்போற இல்ல?''

''ஆமா...''

''சின்ன சந்தேகம். நீங்க ரெண்டு பேரும் இன்னும் படுக்கைல சந்திச்சுக்கவே இல்லைல?''

''என்னைப்பத்தி நல்லா தெரிஞ்சு நீங்க இப்டி பேசுறது - உங்க காட்டுமிராண்டி மன நிலையை காட்டுது..''

''பாவம் நீ யாழினி! ஆறு வருஷமா 'அது' இல்லாம எப்டி இருக்ற?'' அவளின் கழுத்துக்கு கீழே உறுத்தான்.

பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டு ஆனாள்.

''இதுக்குத்தான் என்னை கூப்ட்டியா சண்டாளா! நான் போரேன்?''

''ஏன் போற உக்காரு!'' கட்டளையிட்டான். ஏனோ அவள் எழவில்லை.

''மனசைக் காயப்படுத்தாதிங்க..''

''நீ பண்ணல? சரி விடு. ரிலாக்ஸ் யுவர் செல்ப் யாழினி!'' அவள் கைகளை பிடித்தான். எப்போது உதறுவாள்?

'நம்மின் ஆறுமாத சண்டை புதுநட்பை மறுக்கிறது..'

பதில் பேசாமல் அவளின் புறங்கையை தடவினான்.

''டைவர்ஸ் ஆய்ட்டா நாம ஒருத்தருக்கு ஒருத்தர் கீரியும் பாம்புமா இருக்கணும்னு என்ன தேவகட்டளை யாழினி?''

கைகளை விடுவித்துக் கொண்டாள். அவள் முக வாயை பிடித்தான். ''ஒண்ணு தெரியுமா யாழினி! ஆறு வருஷத்துக்கு முன்னாடி உன் அழகு பக்குவப்படாம இருந்துச்சு. இப்ப சூப்பரா இருக்க!''

''ஸ்டாப் யுவர் காமென்ட்ஸ்!''

''டைனிங் டேபிள் கீழேயே உன்னை ரேப் பண்ணிடு வேன்னு பயப்படுறியா!''

''அதுக்கு வேற ஆளை பாருங்க... நிலைமை அபாயகரமானதாய் போகிறது.''

மீண்டும் அவளை பிடித்து காதல் பார்வை வெடித் தான். 'கடவுளே! ஏன் இவளை இவ்வளவு அழகாக படைத்துத் தொலைத்தாய்?' புறங்கையில் முத்தமிட்டான். தடுக்க முடியாத பலவீனம். காட்டாறை எதிர்த்து நத்தை நீந்துமா? மகா கடினப்பட்டு அவனை உதறினாள்.

''நீ ஒரு மிருகம் இளஞ்சேரன்...'' எழுந்தாள்.

''விருந்தும் வேண்டாம் ஒண்ணும் வேண்டாம். நான் வீடு போகிறேன்...''

இளஞ்சேரனும் பொறுமையிழந்து கத்தினான்.

''காரணமில்லாமல் கத்தும் குட்டிப் பிசாசே! உன்னை கல்யாணம் பண்ணி எவனும் உருப்பட முடியாது. பாவம் நாகதேவ்! அவன் வாழ்க்கையையும் குட்டிச்சுவர் ஆக்கப் போகிறாய். அவனுக்காக நான் மிகவும் வருந்துகிறேன்''

யாழினியும் விருந்து அயிட்டங்களை மேஜையிலிருந்து தள்ளினாள். வெளியே வேகமாய் ஓடிப்போய் ஆட்டோ பிடித்து தன் வீட்டுக்குப் பறந்தாள். யாழினி - இளஞ் சேரன் இடையே எந்த காலத்திலும் சுமுகமான சூழ்நிலை நிலவாது போல.

கிளினிக்கில் மும்முரமாக நோயாளிகளை யாழினி பார்த்துக்கொண்டிருந்தபோது ராஜி உள்ளே வந்தாள்.

''மேடம்! நமக்கு மெடிக்கல் எக்கியூப்மென்ட்ஸ் சப்ளை செய்த ஏஜென்ஸியிலிருந்து அபிநேஷா என்னும் பெண் மணி வந்திருக்கிறார்''

''உள்ளே வரச்சொல்!''

உள்ளே வந்தா அபிநேஷா ஜீன்ஸ்ஸ்கர்ட்டும் ஸ்லீவ் லெஸ் பனியனும் அணிந்திருந்தாள். உரிமையாகப் பேசினாள். அரைமணி நேரத்தில் அன்னியோன்யம் ஆனாள்.

''ஏங்க யாழினி!உங்களுக்கு கல்யாணம் ஆய்ருச்சா?''

''ஆகி டைவர்ஸ்ஸும் பண்ணிக்கிட்டேன்...''

''அடப்பாவமே! உங்க மாஜி கணவன் எங்கிருக் கிறார்?''

''நெய்வேலியில் தான். என் எல் சியில் ஜியாலஜி எக்ஸ்பர்ட். இளஞ்சேரன் என்பவர்!''

''இளஞ்சேரனா?'' வியந்தாள்.

''ஏன், தெரியுமா?''

''ரொம்ப நல்லா தெரியும். ரொம்ப ரொம்ப நல்லவர் ஆச்சே!''

''அது உன் அபிப்ராயம்...''

''இல்லை, அவருடன் பழகும் எல்லா பெண்களின் அபிப்ராயம்...'' அடப்பாவி! நாம தான் தனிமைல வெந்து சாகிறோம். வெரைட்டி வெரைட்டியா தூள் கிளப்பியிருக் கிறான்.

''அதனால் எனக்கென்ன?''

''நீங்க ரெண்டு பேரும் திரும்ப சேர சான்ஸ் உண்டா?''

''இந்த ஜென்மத்ல கிடையாது. ஏன்?''

''நான் மும்முரமா இளஞ்சேரனை காதலிக்கிறேன். எனக்கு இந்த மாஜி மனைவிகள் போபியா. நாளைக்கு எங்க கல்யாணத்தப்ப நீங்க விளக்கமாற தூக்கிட்டு வந்துடக் கூடாது பாருங்க. அதுக்குத்தான் கன்பர்ம் பண்ணிக்கிறேன்...''

யாழினி இனம்புரியாத பொறாமை உணர்வில் இருண்டாள்.

ஏதோ ஒன்று தன்னைவிட்டு நிரந்தரமாக கழண்டு விழுவதைப் போல பிரமித்து வேதனை கொண்டாள்.

5

அபிநேஷாவை இப்போது விசேஷமாக உறுத்தாள் யாழினி. தன்னைவிட நீளமான அடர்த்தியான பளபளப்புக் கூந்தல். தன்னைவிட பெரிய மார்பகங்கள். தன்னைவிட குறுகிய அமைப்பான இடை. டென்டல் க்ளோ தடவி யிருப்பாள் போல. பற்கள் அதிக வெண்மையாய். மொத்தத்தில் அழகுடன் கவர்ச்சி கூடிய நங்கை.

''நீ சொல்வது முழுதும் உண்மைதானா அபிநேஷா?''

''உண்மைதான் யாழினி!''

''அவரும் உன்னை காதலிக்கிறாரா?''

''ஆமாம் யாழினி!''

''உன்னைத் திருமணம் செய்துகொள்ள தயாராய் இருக்கிறாரா?''

''தயாராய் இருக்கிறார். கூடியவிரைவில் திருமணம்''

''வாழ்த்துக்கள். ஆனால் ஒரு எச்சரிக்கை...''

''என்ன''?

''இளஞ்சேரனிடம் எச்சரிக்கையாய் இரு.''

''ஏன்?''

''திருமணத்துக்கு முன் படுக்கைக்கு கூப்பிட்டால் போய்விடாதே!''

''போனால் என்ன?''

''அடிபேதைப் பெண்ணே! என்னை படுக்கையில் சந்திக்க நூறு உபாயங்களை மேற்கொண்டு அனைத்தும் தோற்றுப்போனதால் இறுதி வழியாக திருமணம் செய்து கொண்டார். உன்னிடமுள்ள இளமை அவருக்கு வேறு ஒருத்தி மூலம் கிடைத்தால் உன்னையும் உதறிவிடுவார்-

அபிநேஷா முகம் கன்றிப் போனாள்.

''என் வருங்கால கணவரைப் பற்றி குறைசொல்ல உங்களுக்கு உரிமையில்லை.''

''அடிபட்டவள் தோழிக்கு அறிவுறை கூறக் கூடாதா?''

''இது அறிவுரையாக தெரியவில்லை. உள்நோக்கம் கொண்ட பேத்தலாக தெரிகிறது!''

''அப்புறம் உன்னிஷ்டம்!''

''யாழினி? எது எப்படி இருந்தாலும் எங்க கல்யாணத்துக்கு இன்விடேஷன் வரும் மறக்காம வந்துடுங்க. அப்பத்தான் எனக்கு குற்ற உணர்ச்சி வராது!''

''நிச்சயம் வருகிறேன் அபிநேஷா!''

''ஓகே. நான் வருகிறேன். ஹோப் டு சீயி எகைகன்'' டாக் டாக் என்று நடந்து போனாள் அபிநேஷா. அவளின் பின்பகுதி நெளிவும் வளைவும் சூப்பர். அதுதான் மயங்கி விட்டான் இளஞ்சேரன். இன்று இவள் வந்தது தற் செயலா, திட்டமிட்ட செயலா? தன் காதலியை அனுப்பி என்னை ஆழம் பார்க்கிறானா? நீ நாகதேவை கல்யாணம் பண்ணிக் கொண்டால் நான் ஒன்னும் தனிமரமாக நிற்கப் போவதில்லை. உன்னைவிட டாப் ஸ்டார் அபிநேஷாவை திருமணம் செய்து உல்லாசமாக இருக்கப் போகிறேன் என்று காட்டுகிறானா? திருமணம் செய்வதாக இருந்தால் ஆறு வருடங்கள் முன்பே பண்ணித்தொலைத்திருக்க வேண்டியதுதானே! என் கண் முன்னால் தான் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று எதுவும் வேண்டுதல் வைத்திருக் கிறானா?

யாழினி மாடிப்படிக்கு அருகிலிருந்த அலமாரியில் ஒரு நாவலை தேடிக் கொண்டிருந்தாள். சமையல் அறையிலிருந்து எழுந்த தடபுடல் சப்தம் அவளை எரிச்சல் மூட்டியது. திறந்த அலமாரியை அப்படியே விட்டுவிட்டு நுழைந்தாள். உருட்டியது அம்மாதான். ஒரு ட்ரேயில் க்ரீம் கேக்குகள் அமர்ந்திருந்தன. டீ தயாராகிக் கொண்டிருந்தது.

''என்னம்மா டீ பார்ட்டியா?''

''ஆமாம்மா... எங்க மாதர் சங்க மீட்டிங். வேற எங்கயும் இல்லை, நம்ம தோட்டத்துல!''

''என்னைக்கு?''

''என்னைக்கா? இன்னும் கொஞ்ச நேரத்துல. பாதிபேர் ஏற்கனவே வந்து தோட்டத்துல உக்காந்து இருக்காங்க.

''எனக்கு இந்த மாதர் சங்கம்னாலே ஆவல, பட்டுப் புடவை, நெக்லஸ் போட்டு லாத்திக்கிட்டு அடுத்தவங்களை பத்தி குறை பேசிகிட்டு சிறு சாதனைகளை போட்டோ எடுத்து பெரிசு பண்ணிகிட்டு.''

''பொத்தம் பொதுவா இப்படி சொல்லாதம்மா...''

''உனக்கு ஈகோம்மா. பத்து பொம்பளைங்களுக்கு சங்கத்தலைவியா இருந்து உன் ஈகோவை திருப்தி பண்ணிக்கிற..''

யாருக்கும்மா ஈகோ இல்லை. உனக்கு ஒரு டன் இருக்கே. நாங்க என்ன பண்றோம்னு ஜவகர் ஸ்கூலை கேட்டுப்பாரு..''

'எப்படியோ இது ஒரு பாரம் பரியம் ஆகிப்போச்சு!''

''யாழினி! இளம் பெண்கள் பேரிளம் பெண்களை நக்கல் பண்ணுவதும் இப்போது பாரம்பரியம் ஆகிப் போச்சு!''

யாழினி சங்கோஜினாள்.

''இப்படித்தான் நிறையவிசயங்கள்ல தேவையில்லாம வாதம் பண்றது என் பழக்கமா போச்சு இல்ல?''

சிரித்தாள் அம்மா.

''இளஞ்சேரன் விசயத்துலயும் இல்ல?''

''ஒரு வழில பார்த்தா உண்மைதான்.''

''இப்ப நிறையவே மாறிவிட்டார் இளஞ்சேரன்.''

''ஆமா. முந்தி கன்னாபின்னான்னு ட்ரஸ் பண்ணுவார். இப்ப ரொம்ப டீசென்டா...''

''இளஞ்சேரன் கொஞ்சம் முரடு. ஆனா, பெரிய புத்திசாலி. அவருக்கு பிரகாசமான எதிர்காலம் இருக்கு தெரியுமா?''

''அவன் மேல உனக்கு பிரியமா?''

''ஆமா யாழினி. எனக்கும் உன் அப்பாவுக்கும் இளஞ்சேரனை சொம்ப பிடிக்கும்!''

''அப்படின்னா நாங்க என்னைக்காவது ஒண்ணு சேருவோம்னு நம்பிகிட்டு இருக்கீங்களா?''

''ஏம்மா முடியாதா?''

''முடியாதம்மா முடியாது. நிரந்தர பள்ளம் விழுந்து விட்டது!''

''இனி ஆண்டவன் விட்ட வழி!'' பெருமூச்சு விட்டாள் அம்மா. யாழினி திரும்ப அலமாரிக்கு நடந்து நாவலைத் தேட ஆரம்பித்தாள்.

தொலைபேசி சிணுங்கியது. யாழினி ரிசீவரை எடுத்து காதில் பொருத்தினாள். ''அலோ!''

''அலோ யாழினி! நான் நாகதேவ்!''

''என்ன நாகதேவ்! ரெண்டு நாளா ஆளைக் காணோம்?''

''ஒரு முக்கியமான விசயம்!''

''என்ன?''

''போனில் வேண்டாமே!''

''பின்ன?''

''ராம் ரூப் கார்டனுக்கு இரவு 7 மணிக்கு வந்து விடுங்கள். நான் ரெண்டு சீட் ரிசர்வ் பண்ணி விடுகிறேன்!''

''சரி நாகதேவ்!''

''மாலை சந்திக்கும் வரை என் டாக்டர் தேவதைக்கு நூறு முத்தங்கள்...பச்.''

அடுத்த பச் கேட்கும் முன் ரிசீவரை வைத்தாள். என்ன விசயமாயிருக்கும்?

நாகதேவ்க்கு வேறு எங்கயும் பெண் பார்த்து விட்டார்களா? கையிலிருந்ததை தவற விட்டுவிட்டு புலம்பித் தவிக்கப் போகிறேன்.

காரை ஓட்டலின் முன் நிறுத்தி இறங்கினாள். கார் கதவை சாத்தி லாக் செய்தாள். ரூப் கார்டனுக்கு நடந்தாள். ஏற்கனவே ரிசர்வ் செய்யப்பட்ட டேபிளில்

நாகதேவ் அமர்ந்திருந்தான். மங்கிய வெளிச்சத்தில் கை உயர்த்தி ஆட்டினான். விசேஷ கவனமாக ஆடை உடுத்தியிருந்தான். முகத்தில் மட்டும் வேதனை. அவன் எதிரில் அமர்ந்தாள். பேரர் வந்தான். டிஷ் கார்டை நீட்டினான். பிரித்தான் நாகதேவ்.

''என்ன சாப்பிடுறீங்க யாழினி?''

''கொஞ்சமா ஆனா உங்க இஷ்டம் போல...''

''ரெண்டு பிளேட் பட்டர்நான். ரெண்டு பிளேட் டிரைசிக்கன்.'' ஆர்டர் பண்ணினான்.

பேரர் போனவுடன் யாழினி கேட்டாள். ''இப்ப சொல்லுங்க நாகதேவ். என்ன முக்கியமான விசயம்?''

''எனக்கு டிரான்ஸ்பர் ஆர்டர் வந்திருக்கு!''

''எந்த ஊருக்கு?''

''நார்த் இண்டியாவுக்கு!''

''டிரான்ஸ்பர் உறுதியா?''

''உடனே ஜாயிண்ட் பண்ண ஆர்டர் வந்துருச்சு!''

''என்ன முடிவு பண்ணீங்க?''

''ரெண்டு வாரம் டயம் கேட்டு இருக்கிறேன்!''

யாழினி சோகமானாள்.

''யாழினி! யாழினி! நம்பளை பற்றி என்ன முடிவு பண்ணீங்க?''

''இன்னும் நான் ஒரு முடிவுக்கும் வரவில்லை!''

''என் துரதிர்ஷ்டம் என்னை விட்டு நீங்காது!

''சாரி நாகதேவ்!''

''பரவால்ல யாழினி! உங்க நேர்மையை மதிக்கிறேன் என்னை புண்படுத்தினால் கூட...''

''என் நிலை அப்படி. நான் வேண்டுமென்றே உங்கள புண்படுத்தவில்லை...''

பேரர் அயிட்டங்களை கொண்டு வந்து டேபிளில் பரத்தினான்.

யாழினி பக்கம் நானையும் சிக்கனையும் தள்ளினான் நாகதேவ்.

''சாப்பிடுங்க யாழினி! ஆறிடப் போவுது!''

நாகதேவ் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே இவர் களை கடந்து ஒரு ஜோடி நடந்து போனது. நிமிர்ந்தாள் யாழினி. அந்த ஜோடியில் ஆண்-இளஞ்சேரன். பெண் அபிநேஷா.

யாழினியும் இளஞ்சேரனும் ஒருவரை ஒருவர் பார்த்து விட்டனர். யாழினி நட்பாய் புன்னகைத்தாள். ஆனால் இளஞ்சேரனோ - சம்பந்தமே இல்லாத பெண் தன்னை பார்த்து நகைப்பதாய் அலட்சியம் செய்து நடந்தான். உடல் முழுதும் அவமானம் கொப்பளித்தது. கைகால்கள் நடுங்கின.

இவர்களுக்கு எதிரில் இளஞ்சேரன் அபிநேஷாவுடன் அமர்ந்தான். பேரரிடம் ஏதோ ஆர்டர் செய்தான். பின் அபிநேஷாவின் கைகளை பிடித்து கொஞ்சினான். பின் அவன் கால்கள் அபிநேஷாவின் கால்களை குசலம் விசா ரித்தன. அவளை இழுத்து தன் கழுத்தில் புதைத்துக் கொண்டான். நடப்பதை பார்த்து பார்த்து கொதிநிலை அடைந்தாள் யாழினி.

எவ்வளவு பெரிய அயோக்கியன் என் மாஜி கணவன்? இன்னும் என்னை துன்புறுத்துகிறான். முன்னாடி நான்

அவனை புண் படுத்தியதற்கு வட்டியும் முதலுமாய் திருப்பி செய்கிறான்.

யாழினியிடம் கிசுகிசுத்தான் நாகதேவ்.

''அங்க உக்காந்து இருக்கறது இளஞ்சேரன்தானே?''

''ஆமா...'' தாடையில் குண்டூசிக் குத்தாய் வலித்தது. ''வாங்க எந்திரிச்சு போவலாம் ..''

''நானே நினைச்சேன். மிஸ்டர் இளஞ்சேரன் குடிச் சிருப்பார் போல. பொது இடத்துல ஒரு பொண்ணோடு இப்படியா பிகேவ் பண்றது?''

''அவன் கிடக்கிறான் வாங்க...''

புயல் வேகமாய் கிளம்பினாள் யாழினி. பின் தொடர்ந் தான் நாகதேவ். இருவரின் முதுகை பார்த்து நக்கலாய் சிரித்தான் இளஞ்சேரன்.

வீட்டுக்கு வந்ததும் ஆக்ரோஷம் அடங்கவில்லை யாழினிக்கு. மாடிக்கு வேகமாய் ஓடும் மகளை பயத்துடன் வெறித்தாள் அம்மா. அறைக்குள் போனாள். பரபரப்பாய் பீரோ சாவியை எடுத்தாள். சாவி கொத்தில் எந்த சாவி பொருத்தமானது - தடுமாறினாள் கடைசி சாவியில் பீரோ திறந்து கொண்டது.

உள்ளே மேல் அடுக்கிலிருந்து துணிமணிகளை எடுத்து கீழே வீசினாள். அங்கு அவள் தேடியது இல்லை. அடுத்த தட்டிலிருந்தும் துணிமணிகளை எடுத்து விசிறி னாள். கீழ்தட்டில் நான்கு ஆல்பங்கள் இருந்தன. எடுத்தான் ஆல்பத்தை பிரித்தாள். யாழினி-இளஞ்சேரனின் கல்யாண ஆல்பம். போட்டோவில் சிரித்தபடி போஸ் கொடுத்த இளஞ்சேரனை சபித்தாள்.

பாவி! உனக்கு எப்ப பார்த்தாலும் சிரிப்புதானா? சாகும்போது கூட சிரித்துக் கொண்டுதான் சாவாயோ! நீ நாசமாப் போக!

போட்டோக்களை எடுத்து வெறித்தனமாய் கிழித்துப் போட்டாள். நூறு துண்டுகளாய் கீழே கிடந்த இளஞ் சேரன் சிரித்தான். இளஞ்சேரன் சம்பந்தப்பட்ட அனைத்துப் போட்டோக்களையும் எக்காளமாய் கிழித்து விசிறினாள்.

அடுத்து என்ன செய்வது? அங்குமிங்கும் திரும்பி வெறித்தாள். இளஞ்சேரன் சம்பந்தப்பட்ட வேறென்ன பொருள் நம்மிடம் உள்ளது? ஆகா! அவன் எனக்கு பல தருணங்களில் பரிசளித்த பொருட்கள் உள்ளனவே! அவை களை ஏன் விட்டு வைக்க வேண்டும்? முட்டாள் தனமாய் இந்தனை நாளாய் அவைகளைப் பாதுகாத்ததே பெரும் தவறு.

அடுத்த பீரோவை திறந்தாள்.

கண்ணாடிக் கூண்டுக்குள் அழகிய தாஜ்மகால்! கை யில் எடுத்தாள். இதை பரிசளிக்கும் போது இளஞ்சேரன் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது.

''யாழி! உலகின் நவீன காதலர்களுக்கெல்லாம் கோயில் தாஜ்மகால் தான். அது கோடிக்கணக்கான ரூபாய் செலவில் லட்சக்கணக்கான மனித வேலை நாட்கள் நஷ்டத்தில் கட்டப்பட்ட கட்டிடம் அல்ல. காதலை நிறைத்து காதலாய் காதலுக்காக கட்டப்பட்ட காதல் கோயில். ஒவ்வொரு காதல் ஜோடியும், ஒவ்வொரு கணவன் மனைவியும் வாழ்வில் ஒருமுறை கட்டாயம் உன்னதம் - காதல் என்று உலகத்தின் காது கிழிய கூவ வேண்டும். பளிங்கு கல் தரையில் அங்கபிரதட்ணம் பண்ண வேண்டும். மும்தாஜ் - ஷாஜஹானை மானசீகமாய் வணங்கவேண்டும். யாழி! இந்த தாஜ்மகால் மாடலை

உனக்கு பரிசளிக்கிறேன். இதை நீ பத்திரமாய் காக்க வேண்டும். இதை நீ ஸ்பரிசிக்கும் போது என்னை தொடு வதாய் உணரவேண்டும். காலங்கள் மாறலாம். நம் அன்பு குறையலாம். ஏன் நம்மிடையே மனவேற்றுமை வளர்ந்து பிரிவு ஏற்படலாம். ஆனால், எந்த தருணத்திலும் இந்த தாஜ்மகாலை வெறுத்திடாதே!''

பேச்சுக்கு ஒண்ணும் குறைச்சலில்லை. பேசிப் பேசியே அழகிய யுவதிகளை கர்ப்பம் செய்து விடுவான். துளியும் குறையாத வெறியுடன் தாஜ்மகால் மாடலை தரையில் அடித்து நொறுக்கினாள். லட்சம் துண்டுகளாய் சிதறு தேங்காய் ஆனது. உடைந்த மாடலின் சிறு சிறு துணுக்கு கள் இளஞ்சேரனின் இதயத்தின் சிறு தசையாய் பிரமை தந்தது.

தொடர்ந்து எல்லா பரிசுகளையும் ஈவு இரக்கம் இல்லா மல் உடைத்து நொறுக்கினாள். நடக்கும் அமளிதுமளியை கவனித்தபடி அறை வாசலில் அம்மாவும் அப்பாவும் நின்றி ருந்தனர்.

இனி உடைக்க எதுவும் இல்லாமல் தளர்வாய் படுக் கையில் அமர்ந்து விசும்பி விசும்பி அழுதாள் யாழினி. மெதுவாக அம்மாவும், அப்பாவும் பக்கத்தில் வந்தனர்.

''என்னம்மா நடந்தது?''

''இனி என்ன நடக்கணும்?''

''இளஞ்சேரனோடு எதுவும் சண்டைய?''

''ப்ளடி ஷிட். என் கூட சண்டை போட அவனுக்கு என்ன யேரக்கியதை இருக்கு?''

''பின்ன என்னம்மா நடந்தது?''

''அது உங்களுக்கு தேவையில்லாதது. மை டியர் பேரன்ட்ஸ்! நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். உடன டியாக கல்யாணம் பண்ணிக் கொள்ள தீர்மானித்து விட்டேன்!''

''மாப்பிள்ளை?''

''வேறு எவன்? நாகதேவ் தான்?''

''காலைல பேசிக்கலாமேம்மா...''

''நான் என்ன போதையிலா இருக்கேன்? காலைல மாத்திச் சொல்ல. அடுத்த வாரமே கல்யாணம். இன்வி டேஷன் அடிங்க ..''

''சரிம்மா!''

போனுக்குப் பாய்ந்தாள் யாழினி. டயல் செய்தாள். எதிர்முனைபில் நாகதேவ் கிடைத்தான்.

''என்னங்க இப்பத்தான பார்த்தோம். என்ன விசயம்?''

''நல்லா கவனிங்க. அடுத்தவாரமே நம்ம கல்யாணம். கல்யாணம் முடிஞ்சதும் வேலைய ரிசைன் பண்ணிட்டு உங்க கூட நார்த் இண்டியா வந்துடுறேன். ஆர்டர் குடுங்க '' அவள் சொல்லிக் கொண்டே போக வானம் வரை துள்ளிக்குதித்தான் நாகதேவ்.

6

நாகதேவ் புது மெருகேறி இருந்தான். பிரில் கிரீம் உபயோகித்து கவனமாய் தலை வாரிபிருந்தான். கன்னங்

கள் மழு மழுப்பாய் ஷேவ் செய்யப்பட்டு ஓல்டு ஸ்பைஸ் மஸ்க் பூசப்பட்டிருந்தது. ஆடைகளிலும் புது நேர்த்தி. நடை தரையில் பாவாமல் நடந்தான். காரண காரிய மில்லாமல் சிரித்துக் கொண்டான்.

எதிரில் அமர்ந்திருந்தாள் யாழினி.

''தாங்க் யூ யாழினி!''

''எதுக்கு?''

''நீங்க சம்மதம் சொன்னதற்கு!''

''நான்தான் நன்றி சொல்ல வேண்டும். நான்கு வருடம் காத்திருந்து என் சம்மதத்தை பெற்றதற்கு!''

ஒரு கவரை பிரித்து நீட்டினான்.

''யாழினி! இதுதான் நம்ம திருமண அழைப்பிதழ் மாடல்!''

''மிக அழகாக இருந்தது.

''விலை ரொம்ப கூட போல?''

''ஒரு இன்விடேஷன் நாலு ரூபாய் ஆவுது!''

''எத்தினி இன்விடேஷன் அடிக்கிறீங்க?''

''ஆயிரத்து ஐநூறுங்க. போதுமா?''

''அய்யோ அதிகம்!''

''அதனாலென்னங்க? ஒருத்தர் விடாம இன்விடேஷன் குடுப்போம். நெய்வேலிய ஒரு கலக்கு கலக்குவோம்!''

''உங்களுக்கு வெட்டிங் சூட்?''

''சிசாரி கலக்ஷனில் துணி எடுத்து பாணிடிசேரி நகன்வானிசில் தைக்க குடுத்திருக்கேன். உங்களுக்கு மேட்சிங் பிளவுசோட பட்டுப்புடவை எடுத்திருக்கேன்.''

''என்ன கலர்?''

''பச்சை நிறம்!''

''விலை?''

''ஆறாயிரம்!''

''தேவையா?''

''இருபத்தி அஞ்சாயிரம் ரூபாய்க்கு கூட எடுப்பேன்!''

''கல்யாண மண்டபம்?''

''ஓ! அரேஞ்ச்பண்ணி அட்வான்சும் குடுத்திட்டேன்!''

''ஏ அப்பா! நீங்க பெரிய ஆளுதா!''

''யாழினியை கட்டிக்கப்போற ஆளு சின்ன ஆளா?'' எழுந்து பக்கத்தில் வந்து யாழினியை அணைக்க முயற்சித்தான்.

''நோ. எல்லாம் கல்யாணத்துக்கு அப்பறம். நா புறப்படுகிறேன்.'' எழுந்து நடந்தாள். யாழினியை புரிந்து கொள்ளமுடியாமல் குழம்பியபடி நின்றிருந்தான் நாகதேவ்

முத்துப்பாண்டியன் கையில் திருமண அழைப்பிதழ்கள் திருமணத்துக்கு அழைக்கப்பட வேண்டியவர்களின் முகவரிகளை லேபிளாய் கட் செய்து வைத்திருந்தாள் விசாலினி.

''யாழினி கையில் லிஸ்ட்

''டாக்டர் மாத்ருபூதம்!''

''ம்.''

''லாட்டரி ஏஜென்சி சேகர்!''

''ம்''

''சிதம்பரம் ராமலிங்கம் சார்!''

''ம்.''

''டாக்டர் குத்துக்குமரன்...'' வரிசையாக லிஸ்ட்டை படித்துக் கொண்டே வந்தாள் யாழினி. சரியாக 516 இன்விடேஷன்களுக்கு பின் முத்துப்பாண்டியன் தயங்கினார்.

''என்னப்பா?''

''சொன்னா கோவிச்சுக்க மாட்டியே?''

''சொல்லுங்கப்பா!''

''யபர் யாருக்கோ இன்விடேஷன் அனுப்பறியே. ஒரு முக்கியமான ஆளை விட்டுட்டியே?''

''யார்?''

''இளஞ்சேரன்தாம்மா. என்ன இருந்தாலும் உன் கூட ஆறு மாசம் இருந்தவனாச்சேம்மா...''

''அவனுக்கு எதுக்குப்பா?''

''இன்விடேஷன் குடுத்தா கல்யாணம் நடக்காம இருக்க இடையூறு பண்ணுவான்ப்பா?''

''சேச்சே! அவர் அப்படிப்பட்ட ஆளில்லை...''

''அவனைப் பத்தி உங்களுக்கு ஒண்ணும் தெரியாது. நான் அவனை அழைக்கவும் வேண்டாம். அவன் வரவும் வேண்டாம்..''

''ப்ளீஸ் எனக்காக...''

யோசித்து மலர்ந்தாள்.

''ஆமா! நான் ஏன் பயப்படணும்? என் கல்யாணத்தை அவனால் நிறுத்த முடியுமா? நான் அவனுக்கு இன்விடேஷன் குடுக்கத்தான் போறேன். அத அவன் பார்த்து பார்த்து சாகணும். அப்பா யூ ஆர் கரெக்ட். நாம

அவனுக்கு அழைப்பிதழ் குடுக்கப் போகிறோம். வந்து சாப்பிட்டு விட்டுப் போகட்டும். தன் மனைவியின் திரு மணத்தில் விருந்து சாப்பிட்ட முதல் மாஜி புருசனாய் பெருமை அடையட்டுமே!''

''இன்விடேஷனை நீங்க கொண்டு போய் குடுத் திடுங்க!''

''என்னால முடியாதும்மா!''

''சரி, என்ன பயம்? ப்ரன்ண்ட்ஸ்க்கு குடுக்கப் போகும் போது அவனுக்கும் குடுத்து விடுகிறேன். ஓகேப்பா?''

''ஓகேம்மா!''

வெளியூருக்கு போக வேண்டிய அனைத்து அழைப் பிதழ்களிலும் தபால் தலை ஒட்டினாள். தான் கொடுக்கப் போகும் அழைப்பிதழ்களை எடுத்துக் கொண்டாள். அப்பாவிடம் 200, அம்மாவிடம் 200 கையளித்தாள்.

''பத்தலேன்னா இன்னும் நூறோ இருநூறோ நாக தேவ்கிட்ட இருந்து இன்விடேஷன் வாங்கித் தரேம்மா...''

தோழிகளுக்கு, தெரிந்தவர்களுக்கு அழைப்பிதழ் கொடுத்து முடித்தபோது மணி இரவு 7.45. இளஞ்சேரன் ஒருத்தன் தான் பாக்கி. நாளைக்கு குடுப்போமா? சே! அதுக்கொரு தனி நாளா? இந்தாப்பா இன்விடேஷன். இன்னும் அஞ்சு நாள்ல என் கல்யாணம். மறக்காம வாப்பா என சொல்லி விடுவோம்.

காரை இளஞ்சேரன் குவார்டர்சுக்கு திருப்பினாள். காரை பங்களா வாசலில் நிறுத்தி இறங்கினாள்.

நெய்வேலி புதுச் சுரங்கம் பற்றி ரிப்போர்ட் எழுதிக் கொண்டிருந்த இளஞ்சேரன் அழைப்பு மணி சப்தம் கேட்டு எழுந்தான். பேடை வைத்தான். கைலியை சரியாய் கட்டிக்கொண்டான். கதவை திறந்து வியந்தான்.

''அடடே யாழினி! என்னம்மா இந்த நேரத்துல?''

''காரண காரியமாத்தான் வந்தேன்!''

பதில் பேசாமல் உள்ளே வந்தாள்.

''உக்காரு.'' உட்கார்ந்தாள்.

''இப்ப சொல்லு. என்ன விசயம்?''

''எனக்கு கல்யாணம்!''

''உனக்குதான் ஏற்கனவே ஆகிப்போச்சே!''

''அது கெட்ட கனவு. நாகதேவை இன்னும் ஐந்து நாட்களில் திருமணம் செய்து கொள்ள இருக்கிறேன். இந்தாருங்கள் அழைப்பிதழ்!''

''கல்யாணத்துக்கு வர அழைப்பிதழா? இல்லை வெறும் தகவலுக்கா?''

''எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங் கள்!''

அழைப்பிதழை பிரித்து நோட்டமிட்டான் இளஞ் சேரன். கண்கள் ஏனோ பனித்தன. சுவாசம் ஏறுமாறா னது.

''ஒரு தடவைக்கு நாலு தடவை யோசித்துதான இந்த முடிவுக்கு வந்த?''

''இப்ப இந்த கேள்வி அனாவசியம்...''

''இல்லை, ஏன் கேக்கறேன்னா...இன்னும் உன் மனசுல நான் இருந்து...கல்யாணம் ஆனப்புறவும் நாகதேவ் கூட இருக்கறப்பல்லாம் அசூயையா இருந்து.''

''என் மனசுல நீங்க இல்லவே இல்லை.''

''நெஞ்சுல கைய வச்சு சொல்லு!''

''ஸ்டுப்பிட்!''

''நல்லா யோசிச்சுப் பாரு...பார்ட்டிக்கு வரமாட்டேன்டு வந்த. நாகதேவை நாலு வருசம் இழுத்தடிச்ச. நான் உன்கிட்ட அசிங்கமா பேசுறேன். ரகசியமா சிரிக்கிறேன். இப்ப கூட நீ இன்விடேஷன் கொண்டு வந்தது என்னை பார்க்கத்தான். இத்தனையும் கன்சாலிடேட் பண்ணி பார்த்தா இன்னும் உன் இதயத்துல எனக்கொரு இடம் இருக்குன்னு தெரியுது. இன்ஸ்டன்ட் லாட்டரில நம்பர் சுரண்டி பாக்கற மாதிரி உன் இதயத்தை சுரண்டிப் பார் தெரியும்...''

''காட் டாமிட்! உளறாதே!''

''உன் சப்கான்ஷியஸ் மைண்ட்ல நான் இருக்கேன்றேன். அதை நீ இல்லைன்னு புருப் பண்ண முடியுமா?''

''ஒய் நாட்? இளஞ்சேரன்! நீ குடுத்த தாஜ்மகால் மாடலை உடைத்து விட்டேன். உன் சம்மந்தப்பட்ட அனைத்து போட்டோ ஆல்பங்களையும் கிழித்துவிட்டேன். இதுவே ஆதாரம் ஆகாது?''

''ஆகாது. இது வெளியுலக பாவனை?''

''பின்ன எப்படி நிரூபிக்கச் சொல்கிறாய்?''

''இப்போது மணி என்ன?''

''எட்டு முப்பது!''

''இன்னும் யாருக்காவது இன்விடேஷன் தரவேண்டியிருக்கா?''

''இல்லை!''

''விடியற்காலைவரை என்னுடன் தங்கு பார்ப்போம்''

''என்ன உளறுகிறாய்?''

''யாழினி! நாமிருவரும் தனிமையாக தப்பு செய்ய வசதியாக நாலஞ்சு மணி நேரம் கிடைக்கவில்லை. ஆகவே நம் சுயரூபம் - சாரி - உன் சுயரூபம் தெரியவில்லை. விடியும் வரை மனதில் எந்த கிலேசமும் இல்லாமல் இங்கேயே தங்கு பார்ப்போம். எந்த சலனமும் ஏற்படாம இருந்தேன்னு வச்சுக்க. உன் மனசுல நான் இல்லைன்னு ஒத்துக்கிறேன்!''

''இது ஒரு சதித் திட்டம். நான் ஒத்துக்கொள்ளமாட்டேன்.''

''ஆங்! பயப்படுகிறாய். உன்மேல் உனக்கு நம்பிக்கையில்லை!''

''உங்கள் மேல் எனக்கு நம்பிக்கையில்லை!''

''நான் யோக்கியமான அயோக்கியன். கோடுதாண்டமாட்டேன். சந்தேகம் என்றால் இந்தா என் துப்பாக்கி பாதுகாப்புக்கு வைத்துக் கொள்!''

துப்பாக்கியின் சேம்பரை திறந்து தோட்டாக்கள் உள்ளனவா என்று சோதித்து பார்த்துக்கொண்டாள்.

''இருவரும் தனித்தனி அறையில்தானே?''

''நோ இருவரும் ஒரே அறையில். ஆனால், தனித்தனி கட்டிலில். தூக்கப் வரும் வரை பேசிக்கொண்டு இருப்போம்!''

''வீணாக ஒரு கொலை நடக்கப் போகிறது!''

சிரித்தான்.

''விடிந்தால் தெரிகிறது!''

''நான் அந்த திட்டத்துக்கு ஒத்துக்கொள்ள மறுத்தால்?''

''யாழினி ஒரு வேஷக்காரி என நினைத்துக் கொள்வேன். அவள் வெட்டிப் பேச்சில்தான் சூரத்தனம் காட்டுவாள். செயலாக்கத்தின் போது ஓடி ஒளிந்து கொள்வாள் என முடிவு கொள்வேன்!''

''வேண்டாம் இளஞ்சேரன். என்னை விட்டுவிடுங்கள் ''

''யாழினி! உன்னை பிடித்தா வைத்துள்ளேன்? போக வேண்டுமென்றால் தாராளமாக போகலாம் ''

யோசித்தாள் யாழினி. இவன் சொல்வதிலும் உண்மை இருக்கிறது. எவனை நடுகோர்ட்டில் அறைந்தாயோ, அவனின் காதலியைக் கண்டு பொறாமைப்படுகிறாய். பல விதமாய் அவன் உன்னை அவமானப்படுத்திய போதும் அவனிடம் திரும்ப திரும்ப பேசுகிறாய். உன் மன திண்மையை சோதிக்க இந்த விஷ பரீட்சை தேவைதான்.

''இளஞ்சேரன்! நான் இந்த விஷப் பரீட்சைக்கு ஒத்துக் கொள்கிறேன்!''

''தாங்க்யூ'' சிரித்தான். ''இரவு உண்ண என்ன தயாரிக்கட்டும்?''

இரவு உணவு தயாரிக்க ஆரம்பித்தாள். நல்ல வாசனை அறை முழுதும் கிளம்பியது.

''ரொம்ப நாளைக்கு பின் அருமையான உணவு உண்ணப் போகிறேன். இனி இந்த பாக்கியம் கிடைக்காது. எல்லாம் நாகதேவுக்கே...''

உணவை பரிமாறினாள்.

''நீயும் சாப்பிடு!''

''அப்புறம் சாப்பிடுகிறேன்.''

''ஏன்?''

''சும்மாதான்!''

''யாழினி! நீ எதுக்கு பயப்படுகிறாய் என்பது எனக்குத் தெரியும்!''

''என்ன?''

''உனக்கு தெரியாமல் உணவில் மயக்கமருந்து கலந்து விடுவேனோ என பயப்படுகிறாய்!''

'என் உள் மனதில் இருப்பது இவனுக்கு எப்படி தெரியும்?'

மவுனித்தாள்.

''பயப்படாதே! எல்லா உணவுப் பண்டங்களிலும் என் பங்கை நான் உண்ட பிறகு நீ உண்ணலாம்!''

அவன் முன்னே சாப்பாட்டை இரு பங்காய் பிரித்தாள். ஒரு பாதியை அவன் சாப்பிட்டவுடன் தான் சாப்பிட்டாள்.

கொதிக்க பாலை இரு டம்ளர்களில் ஊற்றினாள். பின் திருப்தி ஆகாது இரு டம்ளர் பாலையும் ஒன்று சேர்த்து மீண்டும் தனித்தனி டம்ளர்களில் நிறைத்தாள். அவன் ஒரு டம்ளரை உறிஞ்சி முடித்தவுடன் தான் குடித்தாள். பற்களை பிரஷ் செய்தாள்.

ஒன்று சேர்ந்திருந்த கட்டில்களை நான்கு அடி இடைவெளி விருத்து பிரித்தாள். காலுக்கு ஒரு தலையணை. தலைக்கு ஒரு தலையணை. போர்வையை உதறி விரித்தாள். படிப்பதற்கு நிறைய புத்தகங்கள் எடுத்துப் போட்டாள். துப்பாக்கி பத்திரமாக இருக்கிறதா என பார்த்துக் கொண்டாள். சுவர் கடிகாரம் சங்கீதமாய் 11 முறை அடித்து ஓய்ந்தது, இளஞ்சேரன் தன் படுக்கையில் அமர்ந்து கொண்டான்.

ஏதாவது பேச வேண்டும் என பேச ஆரம்பித்தாள் யாழினி.

Optimized using trial version www.balesio.com

''அடுத்து உங்கள் திருமண அழைப்பிதழை எதிர் பார்க்கலாமா?''

''மணப்பெண்?''

''தெரியாத மாதிரி கேக்கறீங்களே? அபிநேஷா தான்...''

''குட் கம்பெனி அவ்வளவுதான். நத்திங் மோர்!''

''அவள் சொன்னாளே!''

''என்னை கல்யாணம் செய்து கொள்ள ஆயிரம் பொண்ணுகள் க்யூ அமைப்பார்கள். எனக்கு பிடிக்க வேண்டுமே!''

''இளஞ்சேரன்! ஒரு ப்ரெண்ட்லி அட்வைஸ். நீங்க தாராளமா அபிநேஷாவை திருமணம் செய்து கொள்ள லாம். என்னை விட அழகா இருக்கா. வேலையும் பார்க்கறா...''

''ஓகோ!''

''நான் நாகதேவோட ஜோடி சேர .. நீங்க அபிநேஷா வுடன் ஜோடி சேர .. நம்ம ரெண்டு பேருக்குமே புது வாழ்க்கை. வீணாக குற்ற மனப்பான்மை மனசுக்குள் கூடு கட்டாது.''

''அப்படியா பார்ப்போம் ..'' என்றவன் கண்கள் யாழினியை தீர்க்கமாக பார்த்தன. அதில் அளவுக்கு அதிகமான காமமும் உள்மத்தமும் தெறித்தன.

யாழினி தர்மசங்கடமாய் நெளிந்தாள்.

என்ன அப்டி பாக்றீங்க இளஞ்சேரன்?''

''ஒ - ஒ - ஒண்ணுமில்லை...''

''பார்வைல கள்ளத்தனம் தெரியுதே!''

''என்ன பண்றது? பாண்டியராஜன், பாக்யராஜ் மாதிரி ஒரிஜினல் ட்ரேட்மார்க் கள்ளப்பார்வை ..எனக்கு... என்ன பண்றது?''

''நீங்க எதுக்கு இப்டி பந்தயம் கட்னீங்கன்னு எனக்குத் தெரியும்...''

''என்ன தெரியும்?''

''ஏழு மணி நேரம் அவகாசம் இருக்கு. மாஜி மனைவி கிட்ட பேசி பேசி அவளை உருக்கி உருக்கி மயக்கிரலாம்னு கணக்குப் போட்டிருக்கீங்க...''

''அப்டியா? நீ சொன்னா சரியாத்தான் இருக்கும்''

''நீங்க தோக்கப் போறீங்க...''

''ஹேஷ்யத்துக்கு நன்றி ..''

இருவரும் சிறிது நேரம் மௌனமாய் இருந்தனர்.

''யாழினி!

''என்ன?''

''இந்த ஆறு வருஷத்ல ஒரு தடவையாவது என்னை நினைச்சுப் பாத்தியா?''

''இல்லை...''

''நீ ரொம்ப இறுக்கமானவ. பொய் சொல்ற உன்னால உன் உணர்ச்சிகளை மறைக்க முடியுது. ஆனா என்னால முடியலியே...''

''ஏன் நீங்க என்னை நினைச்சுப் பாத்தீங்களா?''

''நோயாளி இறந்தபிறகு சிகிச்சை பண்ணி என்ன பிரயோஜனம்?''

''உதாரணம் சரியில்லை. கேட்டகேள்விக்குப் பதில்''?

''உனக்கும் எனக்கும் சட்டப்படி விவாகரத்து ஆன கோர்ட்டு ஆர்டர்-என் கைல கெடச்ச அன்னைக்கு ..மனம் விட்டுச் சொல்றேன்...விடிய விடிய கேவி கேவி அழுதேன். நனைந்த என் தலையணையை பிழிந்திருந்தா சென்னை தண்ணீர் பஞ்சம் தீந்திருக்கும். ஏண்டா ஆம்பிளையா பொறந்தோம். அதுவும் அப்பர் மிடில் கிளாஸ் பாமிலில் பிறந்தோம். அதிகமா படிச்சோம். அதனாலதான ஈகோ வந்துச்சு. வார்த்தைக்கு வார்த்த வாயாட வேண்டியதா போச்சு. விரும்பியே வேதனையை பிரிவுத் துயரை நெஞ்சில் விதைக்க வேண்டியதாய் போயிற்று. கடவுளே! யாழினியையும் என்னையையும் ஆதிவாசிகள் கும்பலில் படைத்திருக்கக் கூடாதா? சந்தோஷமாய் வாழ்ந்திருப் போமே! என கதறினேன். யாழினி யாழினி என விடியல் வரை ராமஜெயம் சொன்னேன்...''

ஒரு கணம் இளகினாள் யாழினி. மறுகணம் இறுகினாள்.

''டைலாக் ரொம்ப நல்லாருக்கு. எப்ப மனப்பாடம் பண்ணீங்க?''

''ம். நேத்லயிருந்து ..''

''பரவால்ல நிறைய ஞாபக சக்திதான் உங்களுக்கு''

''தாங்க்யூ ..''

''ஆமா...கோர்ட் நடுவுல வச்சு செமத்தியா நாலு அறை விட்டேனே! ரோஷம் வரல உங்களுக்கு அன்னிக்கி? நல்ல ஆம்பிளையா இருந்தா ஒண்ணு அடிச்ச கையை கோர்ட்னு பாக்காத சடக்னு உடைச்சிருப்பான். வீட்ல போய் தூக்கு போட்டு தற்கொலை பண்ணிருப்பான்..''

சிரித்தான் இளஞ்சேரன்.

''உனக்கு என் மேல எவ்ளவு பிரியம், கொம்பேறி மூக்கன் மாதிரி. நாம கொத்னவன் செத்தான்னான்னு மரமேறி பாக்குமாம். குதிரை மாதிரி குப்புறத் தள்ளி குழியும் பறிக்குமாம். டைவர்ஸ் வாங்கினவன் தற்கொலை பண்ணிக்கணும்னு ஆசைப்பட்டுருக்க. வாட் எ பிட்டி! நடக்கலியே! என் ஆசை மாஜி மனைவியின் ஆசை அப்போதைக்கு எனக்கு தெரிந்திருந்தால்-என் மரணக்குழியில் மரம் முளைத்திருக்கும். இன்று இரவு இப்படி பேசிக் கொண்டு இருந்திருக்க மாட்டோம் ..''

''ச்ச்ச். இந்த டைலாக்கும் சூப்பர்...''

''இதயும் கேளு டைலாக் சூப்பரோ சூப்பர்னுவ. அன்னைக்கி நீ என்னை கன்னத்ல அறைஞ்சப்ப சீரியசா எடுத்துக்கல ..''

''ஏன் நிறைய பொம்பிளைங்க கிட்ட அடிவாங்கி பழக்கமா?''

''அவசரப்படுறியே! நான் சொல்ல வந்தது வேற. நல்லா ஞாபகப் படுத்தி பாரு. அந்த சம்பவத்துக்கு முன்னாடி பலதடவை பல மாதிரியா உன்கிட்ட அடி உதை வாங்கியிருக்கேன். அதுமாதிரி தான் கோர்ட் சம்பவமும்னு இருந்தேன் ''

''பொய் முழுபொய். நான் உங்களை அதற்கு முன் அடித்ததே இல்லை ..''

''நல்லா யோசிச்சுப் பார் ..''

''நிச்சயமா இல்ல. நீங்க வேணா என்னக்கி அது மாதிரி நடந்தேன்னு கோடிட்டுக்காட்டுங்க. உண்மைன்னா ஒத்துக்கிறேன் ''

''உனக்கு அம்னோஷியாவா... நல்ல டாக்டர் கிட்ட காட்டு. நாம படுக்கைல இருக்றப்ப எத்தனை முறை செல்லமா உதைச்சிருக்க, அடிச்சிருக்க, கிள்ளிருக்க, தலையணையை விட்டெறிஞ்சிருக்க, மொத்திருக்க...''

கோபமாய் நாணினாள்.

''சே! நீங்கள் ஆபாசமாய் பேசறீங்க. அப்டிப்பாத்தா உலகத்ல எல்லா பொண்டாட்டியும் அவ அவ புருஷனை அடிச்சிருக்கா, உதைச்சிருக்கான்னு தான் சொல்ல முடியும்...''

''கோர்ட்ல நீ அடிக்றப்ப - நாம படுக்கைல இருக்ற மாதிரியும் நான் 'மு' குடுத்திட்ட மாதிரியும் - அதுக்காக நீ ஜாலியா அறைஞ்ச மாதிரியும் கற்பனை பண்ணிக்கிட்டேன்...''

''நாம படுக்கைல இருக்றப்ப கோர்ட்டே வேடிக்கை பாக்ற மாதிரியா கற்பனை பன்ணீங்க...

அப்பாடி! உங்க லவ்வர் அபிநேஷா அதிஷ்டசாலி''

''முதலில் ஒரு திருத்தம். அவ என் காதலி இல்லை. மீதியைச் சொல்''

''நாளை உங்களுக்கும் அவளுக்கும் கல்யாணம் ஆன பின் ஏதாவது சண்டை வருகின்றது என வைத்துக் கொள்வோம்...''

''நல்ல எண்ணம் உனக்கு. சொல் ..''

''கோபத்தில் நாலு சாத்து சாத்துகிறாள் என வைத்துக் கொள்ளுவோம். அப்பயும் அவள் படுக்கையில் செல்ல அடி அடித்ததாக நினைத்து அசடு வழிவீங்க. வாவ்! நினைக்றப்ப புருஷனை சாத்துற அதிஷ்டம் யாருக்கு கிடைக்கும்?''

''கிண்டலா?''

''ஆமா...''

''சரி பண்ணு. உன் சந்தோஷமே என் சந்தோஷம்''

''அடடா! இன்னைக்கி என்னை புல்லரிக்க வச்சிட்டீங்க.சாம்பலை தடவிட்டு கிணத்ல குதிச்சுர வேண்டியது தான்.

அல்லது நல்லா சொறிய சம்பளத்துக்கு ஆள் வைக்க வேண்டியதுதான்...''

''அறுவை ஜோக்! எங்க கத்துக்கிட்ட யாழினி?''

''என் மாஜி கணவரிடமிருந்து!''

''அசெம்பிளியை கலைச்சிட்டாலும் எம் எல் ஏ எல்லாம் மாஜி எம் எல் ஏன்னு போட்டுக்கிட்டு பதவி யோட சக்கையை தக்கவச்சிக்கிரான். நமக்கு டைவர்ஸ் ஆனாலும் நான் உனக்கு 'எக்ஸ்' ஆகாம மாஜி கணவன் ஆகிறேன் பாரு, உரிமை தொட்ட குறை விட்டகுறை ..''

''உரிமையாவது கிரிமையாவது உளறாதீங்க!''

''எனக்கொரு பழமொழி ஞாபகத்துக்கு வருது!''

''நல்லதா ஞாபகம் வராதே! சொல்லுங்க...''

''அண்ணன் பொண்டாட்டி அரைப் பொண்டாட்டி, தம்பி பொண்டாட்டி முழு பொண்டாட்டின்னு ஒரு பழமொழி தெரியுமா?''

''ஏதாவது வக்கிரப் புத்தி கொண்டவன் சொல்லியிருப்பான்...''

''அந்த பழமொழியை இப்டி கன்டினியூ பண்ணலாம்...''

''எப்டி?''

''மாஜி பொண்டாட்டி முக்கால் பொண்டாட்டி!''

சிரிப்பை அடக்க முடியாமல் விழுந்து விழுந்து சிரித்தாள் யாழினி. சிரிப்பை முடித்த கணம் அசூயை பட்டாள். இளஞ்சேரன் பேசுவது முழுதும் ஆபாசம். ஆனால் ஏன் எனக்கு கோபமே வருவதில்லை. அந்தரங்கத்தில் ஆண் என்ன பெண் என்ன? வெளி பாவனை

முகத்தில் தான் பெண் ஆபாசத்தை ஒதுக்கினாள். உள்ளுக்குள் அவளும் ரசிக்கிறாள் ஒரு எல்லை வரை.

''இளஞ்சேரன்! ஏதாவது ஒரு கிளினிக்கில் ஒரு அறை ரிசர்வில் வையுங்கள்!''

''ஏன்?''

''நாளைக்கி எனக்கு கல்யாணம் ஆனபின் இந்த பழமொழியை நினைத்துக்கொண்டு எங்க வீட்ல படி ஏறி டாதீங்க. நாகதேவ் பெண்டை நிமித்திடுவார்...''

மீண்டுல் சிரித்தான் இளஞ்சேரன்.

''வேற டாபிக் பேசுவோம்...''

''சரி...''

''நீ நம்ப கல்யாணத்தப்ப எடை என்ன?''

''என்ன டயடீஷியன் மாதிரி கேக்றீங்க?''

''சொல்லேன்...''

''நாப்பத்தி நாலு கிலோ...''

''இப்ப?''

''அம்பத்தி ஆறு கிலோன்னு நினைக்கிறேன்...''

''திடீர் எடை ஏற்றம் ஏன்?''

''யாருக்குத் தெரியும்?''

''சாப்பாட்டைக்குறை. இல்லை நல்லெண்ணெய் சித்ரா மாதிரி ஆகிடுவாய்...''

''நீங்க இப்டிச் சொல்றீங்க! நாகதேவ் வேற மாதிரி சொல்கிறார்!''

''என்ன சொல்கிறார்?''

''நான் எவ்ளவு வேண்டுமானாலும் குண்டானா பரவாயில்லையாம். சதைத்த பெண்களைதான் அவருக்கு பிடிக்குமாம்...''

''பின் எதுக்கு உன்னை பிடிச்சாப்டியாம்? பேசாம பிந்துகோஸை புடிச்சுப் போட்டிருக்கலாம்ல அவரு...''

''ஆறு வருஷத்ல வேற என்னென்ன மாறிப் போயிருக்க தெரியுமா?''

''சரி சொல்லுங்க வேணாம்னா விடவா போறீங்க?''

''அப்ப வெள்ளை வெளேர்னு இருந்த. சிவந்த தோல் மேல இந்தியாக காரன்களுக்கு எப்பவுமே ஒரு மயக்கம் உண்டு. நானும் அப்டித்தான் மயங்கினேன். ஆனா இப்ப என் ரசனை மாறிடுச்சு. ஒரேயடி வெள்ளை, இரத்த சோகை மாதிரி தோற்றம் தரும். மாநிறம் தான் ராஜ அழகு. ஆறு வருஷ வெயில் உனக்கு மாநிறத்தை குடுத்திருச்சு. வயதாக வயதாக எல்லாம் தேயும். இது பொதுமை. நீ விதி விழக்கு. மெருகு ஏறியிருக்கிறாய். சதை பிடிப்பாய் பொப் கன்னம். கழுத்துக்கு கீழே கூட புஷ்டி மதமதப்பு...''

''திஸ் இஸ் டூ மச்!''

''எல்லாம் அனுபவித்ததுதான், ஆனாலும் ரத்தம் சுடுகிறதே!''

''அடக்கவேண்டும், நாவை அடக்கவேண்டும்''

''நாவை அடக்கியிருந்தால்தான் நம் பிரிவு இல்லையே? இன்னேரம் இரண்டு குழந்தை இருந்திருக்கும். மூத்த பையனுக்கு குறைந்தது ஐந்து வயதாயிருக்கும்...''

''உண்மைதான் என்ன பண்ண?''

''காலம் என்பது விடியோ கேசட் போல இருக்கக் கூடாதா? திரும்பவும் நம் முதலிரவு நாளுக்கு ரீவைண்ட் பண்ணிவிடலாம். திரும்பவும் வாழ்க்கையை 'ஏ'யிலிருந்து ஆரம்பிக்கலாம். பழைய தவறுகளை கசப்புகளை கோபதாபங்களை எதுவுமே நடவாது போல எரேஸ் பண்ணிவிடலாம்...''

''யு ஆர் எ பெனடிக் இளஞ்சேரன்!''

''யா...ஐ எம் எ பெனடிக். ஆல் தி கிரியேட்டிவ் பீப்பிள் ஆர் பெனடிக். பேன்டஸிதான் நம் மனித இனத்தை இவ்வளவு உயர்த்தியுள்ளது...''

''பேன்டஸி கிரியேட்டிவ் ஜீனியஸ்க்கு பயன்படலாம். ஆனா புருஷன் பொண்டாட்டிக்கு நடுவுல பயன்படாது...''

''ஐ டோண்ட் நோ...''

''பதில் சொல்லமுடியாதபோது இந்த வார்த்தை நன்கு உபயோகிப் படுகிறது ''

''யாழினி!''

''என்ன இளஞ்சேரன்!''

''உனக்கு மறுபிறவில நம்பிக்கை இருக்கா?''

''ஏன்?''

''சொல்லேன்..''

''உண்டு. அடிக்கடி நான் ஏதோ ஒரு இளவரசியா இருந்ததா இல்யூசன்வரும். முற்பிறவி உண்டுன்னா மறுபிறவி உண்டுதானே. ஸோ! நான் நம்புரேன்...''

''அடுத்த பிறவில நீ ஆம்பிளையர பொறக்கணும். நான் பொம்பிளையா பொறக்கணும். உனக்கு அடங்ன பொண்டாட்டியா இருக்கணும். நூறுவருஷம் வாழணும்...''

யாழினி கலங்கினாள்.

''ஒண்ணு கவனிக்கிறேன். நீங்க எதை பேசினாலும் சுத்தி சுத்தி ஒரு விஷயத்தையே தொடுறீங்க. அது நம் முறிந்த கல்யாணம். அது முறியாமல் இருந்திருக்கக் கூடாதா என்கிற அபிலாஷை. கற்பனையிலாவது என்னுடன் சேர்ந்து வாழ்ந்திட வெறி, நீங்க இப்டி பேசுறது எனக்கு தர்மசங்டத்தை உண்டாக்குது. ஐ எம் டோட்டலி ஹெல்ப்லெஸ். ஓரளவுக்குதான் என்னால நடிக்க முடியும். உங்க வேதனைகளை ஏல்லாம் கேக்றப்ப உங்களை பிடிச்சு தலைய கோதிவிட்டு சமாதானம் சொல்ல உத்வேகம் வருது. எனக்கு என் மேலயே நம்பிக்கை இல்லை. அதான் உங்ககிட்டயிருந்து விலகிவிலகிப் போரேன். நான் தூய்மையானவளா? இல்ல நாகதேவ்க்கு துரோகம் பண்றேனா? ஐ காண்ட் அண்ட்ர்ஸ்டாண்ட் இளஞ்சேரன்!'' இளஞ்சேரன் தன் வலது உள்ளங்கையால் யாழினியின் வாயை பொத்தினான்.

''இது போதும் எனக்கு யாழினி. நீ பேசினதே எனக்கு டானிக்...'' கைகளை பிடித்துக்கொண்டான். அவளின் கை படபடத்தது. உள்ளங்கை வியர்த்திருந்தது. இளம் வெம்மை. கைகளை விடுவிக்க முயன்றாள்.

''கையை விடுங்க...''

''கொஞ்ச நேரம் பிடிச்சே இருக்கேன். விட்டுடு யாழினி!''

''இது தப்பில்லையா?''

''எல்லா செயல்களுக்கும் மொராலிட்டி தேடாத. அந்தந்த வினாடிகளுக்கு ஏற்ப முடிவெடு. உன் கையை பிடிப்பதால் நான் பழைய பலம் பெறுகிறேன்..'' பிடித்த கையை தடவினான்.

''மெதுவான கை, இதோ பச்சை நரம்புகள் ஓடு கின்றன- பசுமையான இலையின் காம்புகள் போல. உன்னுடைய விரல்கள் அனைத்தும் தனித்தனி ஜீவராசி கள் போல அவை என் கைவிரல்களுடன் பேசுகின்றன. அவைகளுக்குள் பாவனையோ பாழும் சமூக கட்டுப் பாடோ இல்லை...''

நெகிழ்ந்தாள் யாழினி.

மெதுவாக அவளின் கையை உயர்த்தி முத்தமிட் டான். இதென்ன ரகசிய கட்டளை? உடலின் அனைத்து ரோமங்கள் ராணுவ மிடுக்காய் நிமிர்ந்தன. ரோமக் கால்கள் அனைத்தும் புடைப்பாய் தெரிந்தன.

இது தப்பு இளஞ்சேரன்'

எழுந்து அவள் முன் முழங்காலிட்டான். ''தெய்வமே! என்னை ரட்சி!'' இருகைகளையும் அவள் முதுகுக்குப்பின் கோர்த்து இழுத்தான். தன் உயரத்துக்கு குறைத்தான். ஆலிங்கனம் உறுத்தல் இல்லாமல் காப்பி புக் ஸ்டைலில் செய்தான். அணைப்பில் உருகினாள். அவனுடைய வியர்வை வாசம் அவளை ஆண்மையாய் தாக்கியது. தலைமுடியை கோதிவிட்டான். காதோர கேசத்தை காதுமடல் மேல் எடுத்து விட்டான். அவளின் மூக்கு நுனியை ரசனையாய் பிடித்துவிட்டான்.

மெதுவாக அவனின் கைகளை விடுவித்து அவனிட மிருந்து இரண்டடி விலகினாள் அவளது இருதய கூட்டில் இதயம் தாறுமாறாய் துடித்தது. உதட்டில் இரத்த ஓட் டம் ஜிருஜிருத்தது. உடல் முழுதும் மின் அதிர்ச்சி பெற் றது போல நடுக்கம். முகத்தில் வியர்வைத்துளிகள்.

''என்னை விட்டு விலகாத யாழினி!'' திரும்பவும் அவளை நெருங்கினான் இளஞ்சேரன்.

''நோ இளஞ்சேரன்!''

இம்முறை ஆக்ரோஷமாய் அவளை கட்டிக்கொண் டான். இழந்த சொர்க்கம் அவளுள் மீண்டது. அவளுள்

பழைய தீ மூண்டது. அவளுக்கு உலகம் முழுவதும் மறந்து போனது. நெய்வேலி மறந்தது. அப்பா அம்மா மறந்தது. நாகதேவ் மறந்தது. நிதர்சனம் இவனும் நானும்தான். நித்தியம் இவனின் அணைப்புதான் என் நிம்மதி எஞ்சிய வாழ்க்கை இவன் அணைப்பில்தான்.

கொஞ்சங் கொஞ்சமாக தன்னை அவனிடம் இழந்து கொண்டிருந்தாள் யாழினி.

''கடவுளே! நாம என்ன பண்ணிக்கிட்டுருக்கம்?'' முணுமுணுத்தாள். இளஞ்சேரன் பதில் பேசவில்லை.

8

எல்லாம் முடிந்து போனது. வெம்மையான காதல் சிறையில் சிக்கி இருந்த யாழினி சிரகணம் விடுபட்டாள். தனக்கும், இளஞ்சேரனுக்கும் நடந்து முடிந்த புது உறவை தப்பு என்றோ தப்பில்லை என்றோ முடிவெடுக்க அவளால் முடியவில்லை. வெறும் உடலில் காற்று பட்டுப்போனது. திரும்பி ஒருக்களித்து படுத்திருந்தான் இளஞ்சேரன். அசதியாக தூங்குகிறானோ இல்லை விழித்திருக் கிறானோ. படுக்கையில் நகர்ந்து நகர்ந்து தன் ஆடை களை சேகரித்தாள் யாழினி.

விருட்டென்று எழுந்து அமர்ந்தான் இளஞ்சேரன்.

''உன் ஆடைகளை விரைவாக அணிந்து கொள்...'' கட்டளையிட்டான். 'யாழினி! நீ வீட்டுக்கு போகும் போது கதவை சாத்திட்டுப்போ. எனக்கு அசதியா இருக்கு. இன்னும் தூங்கணும்!''

ஒன்றும் சொல்லாமல் அவன் எதிரில் தரையில் அமர்ந்தாள்.

''எந்திரி! சீக்கிரம் புறப்படு!''

''எ—எ—என்ன சொல்றீங்க?''

''புரியல...கெட் அவுட்...''

''ஆனா இளஞ்சேரன்..''

அவள் பேச்சை இடை வெட்டினான். அவள் முகத்தை தன்பக்கம் திருப்பி வெறுப்பாய் உறுத்தான். ''இத பாரு யாழினி! நீ எதுக்கு நேத்து ராத்திரி இங்க வந்தியோ அது கிடச்சிருச்சுல்ல, நான் உன் ஆசையை நிவறவேத்தி வைச்சுதுல ரொம்ப சந்தோஷப்படுறேன். ம்ம். நல்ல பொண்ணாப்புறப்படு. போம்மா போ..''

அவனுடைய வார்த்தைகளை கிரகிக்க சிறிது நேரம் பிடித்தது அவளுக்கு. சகலமும் ஸ்தம்பித்துப் போனாள். அவள் முகத்தில் ரத்தம் வெளிறியது. உதடுகள் வெளுத்தன.

''கடவுளே! என்ன உளர்றீங்க? எனக்கு ஒண்ணும் புரியல..''

''புரியலியா?'' கிண்டல் பண்ணினான். ''உன்னுடைய தேவைகளுக்காக தானே நேத்து தன்னந்தனியா ராத்திரியில இன்விடேசன் குடுக்கற சாக்ல என்னை பாக்க வந்த?''

அவமானம் பூரானாய் உடல் முழுவதும் ஓடியது.

''உங்களின் காட்டுமிராண்டித் தனத்தை பேச்சுல காட்டறீங்க!''

''சரி, என் தவறு என்றே வைத்துக்கொள். இன்னும் என்ன அடைமொழி வேண்டுமானாலும் எனக்கு குடு. இப்ப நீ வெளியே போ. நீ என்னை வெறுத்து டைவர்ஸ் பண்ணியாச்சு. இப்ப நாகதேவை கல்யாணம் பண்ணிக்கப் போறியாக்கும். நேத்திரவு நடந்தத நாகதேவ்கிட்ட

மறைச்சு தாலிக்கு கழுத்தை நீட்டப் போறியாக்கும். ஒண்ணு செய். இனி எப்பப்ப தேவைப்படுதோ அப்பப்ப வெக்கப்படாம வந்துட்டு போ. உன் சந்தோஷமே என் சந்தோஷம். உதவி செய்யவே பிறந்திருக்கிறேன்...'' சிரித்தான்.

''அப்ப நீ நேத்து இரவு பூராவும் பேசினது நடிப்பா?''

''ஆமா...ஆடுற மாட்டை ஆடி கறக்கணும். பாடுற மாட்டை பாடி கறக்கனும்மில்ல? உனக்கு உன் பாணியிலேயே நடிச்சு சேவை பண்ண வேண்டியதா போச்சு!''

மின் அதிர்வு பெற்றாள். இளஞ்சேரன் அவளின் பலவீனமான புள்ளியை பலமாய் தாக்கிவிட்டான். சில வினாடிகளுக்கு ஸ்தம்பித்தாள். இதயம் ஏகமாய் வலித்தது. தான் அவன் நினைப்பது போலில்லை என்பதை நிரூபிக்க விரும்பினாள். ஆனால் அவன் பேசவிட்டால் தானே? தப்பு முழுவதும் அவன் மேல் என்று தப்பிக்கவும் முடியாது. ஏனென்றால் தானும் அதில் உடந்தை. தான் என்கிற திமிர்-அகந்தை இல்லையென்றால் தன்னந்தனியாக வந்து இன்விடேஷன் கொடுத்திருப்பேனா?

தலையை வார நேரமில்லை. தலையை பம்பையாய் விட்டு நடுவில் ரப்பர்பான்டை இறுக்கினாள். தன் லேடீஸ் பேக்கை எடுத்துக்கொண்டு வேகமாய் வெளியேறினாள்.

கதவை அறைந்து சாத்தினாள்

காரை கிளப்பினாள். வீட்டுக்கு பறந்தாள். வீட்டுக்குள் யாரையும் அவள் முகம் கொடுத்து பார்க்கவிரும்பவில்லை. அவசர அவசரமாக குளித்தாள். இளஞ்சேரனின் வாசனையை களைய முயற்சித்தாள். தன் முட்டாள் தனத்தை வெகுவாய் நொந்து கொண்டாள்.

டைனிங்டேபிளில் அப்பா.

''நேத்து ராத்திரி எங்கம்மா போயிருந்தே?''

''ப்ரண்ட் வீட்ல தங்கிட்டேம்ப்பா!''

''பயந்தே போயிட்டேன்மா... என்ன ஆச்சோ ஏதாச் சோன்னு . ''

''ப்ரண்ட் மாளவியா கம்பெல் பண்ணினா தங்கிட் டேன்!''

பொய் பேசக்கத்துக் கொண்டோம். எவ்வளவு பெரிய பொய் இது!

கிளினிக். யாழினி நோயாளிகளை கவனித்து முடித்த போது, அபிநேஷா உள்ளே வந்தாள். உள்ளே வரும் போதே அபிநேஷாவின் சிரிப்பில்லாத சிறிதே வெறுப் படிக்கும் முகத்தை கவனித்து விட்டாள் யாழினி. மிக நிச்சயம் அபிநேஷா பேசப்போகும் விசயம் இளஞ்சேர னைப் பற்றியதாகவே இருக்கும் என யூகித்தாள்.

''உட்காருங்க அபிநேஷா!''

''வரவேற்புக்கு ஒன்றும் குறைச்சலில்லை!''

''உங்களுக்கு வேற என்ன வேணும்?''

''யாழினி! நீங்க அன்னைக்கி என்ன சொன்னீங்க?''

''என்ன சொன்னேன்!''

''உங்களுக்கும் இளஞ்சேரனுக்கும் இடையே இருந்த உறவு முறிந்து விட்டது. இனி தொடரவே தொடராதுன் னீங்களே! தொந்தரவு கொடுக்கும் மாஜி மனைவி ஆக மாட்டேன்னு வாக்கு குடுத்தீங்களே!''

''உண்மைதான் சொன்னேன்...''

''அப்புறம் எதுக்கு அவரநேத்து ராத்திரி பாக்க போனீங்க?'' அபிநேஷாவின் கோபம் எரிச்சல் கிளப்ப வில்லை. அதற்குப் பதிலாக இரக்கம் சுரந்தது.

''இன்விடேசன் குடுக்கப்போனேன்..!''

''நான் நம்பணுமா? யாழினி! நீங்க இளஞ்சேரனை சந்திச்சு எதுக்கு உங்க நேரத்தை வீண் பண்றீங்க?''

''நான் அங்க எதுக்கு வந்தேன்னு இளஞ்சேரன் சொன்னாரா?''

''எல்லாம் சொன்னார். அவர் எதையும் என்கிட்ட மறைக்கிறதில்லை தெரியுமா?''

''அப்படியா?''

சிலுப்பினாள் அபிநேஷா.

''நான் நேரடியாவே விசயத்துக்கு வரேன். த பாருங்க யாழினி! இளஞ்சேரன் இனி எனக்கு சொந்தம். நீங்க உங்க சந்தர்ப்பத்தை நீங்களே விட்டெறிந்து விட் டீர்கள். இப்ப அவர் எனக்கே சொந்தம். இப்ப நீங்க என்ன சாகசம் பண்ணினாலும் நிலைமை மாறாது!''

''பொய் சொல்லியிருக்கிறார் காரியம் சாதிக்க. விரைவில் கல்யாண அழைபிதழ் அனுப்புகிறேன்!'' எழுந் தாள். ''கடைசி எச்சரிக்கை யாழினி! இனி என் வாழ்க் கையில் குறுக்கிடாதீங்க...''

அவள் போன பின்பும் அவளின் சென்ட் வாடை நெடு நேரம் அடித்தது. நல்லவேளை அமைதியாகப் பேசிப் போனாள் வெளியே கேட்காது. இளஞ்சேரன் மீது கொலை வெறி கிளர்ந்தது. செய்வதை செய்துவிட்டு அபிநேஷாவிடம் வேறு பெருமை அடித்திருக்கிறான் சண்டாளன். எங்கேயாவது தனியிடத்தில் அமர்ந்து நெடு

நேரம் அழவேண்டும் போலிருந்தது. ஆனால் அழுது எனன பிரயோஜனம்?

போன் எடுத்து நாகதேவை அழைத்தாள்.

''என்ன யாழினி?''

''சாயங்காலம் உங்களைப் பார்க்க வேண்டும்!''

''என்ன விசயம்?''

''நேரில்!''

''இடம்?''

''நம் வழக்கமான ஓட்டல் தான்!''

''ஓ கே யாழினி!''

ரிசீவரை வைத்தாள் யாழினி.

நாகதேவ் கையில் சிறு நகைபெட்டி. சிறிது சிறிதாய் திறந்து காட்டினான். உள்ளே பவள மோதிரம்.

''ஓ நாகதேவ்! இது எதுக்கு இப்ப?''

''மொதல்ல கையில போட்டுக்கங்க!''

''நான் சொல்ற விசயத்தை மொதல்ல கேளுங்க!''

''சொல்லுங்க!'' என்றான் புது கவலையுடன்.

''இன்விடேசன் அடிச்சு தேதியில நம்ம கல்யாணம் வேணாம்?''

''ஏன்ங்க?'' அதிர்ந்தான்.

''மனசு சரியில்லை. ஐம்ரியலி கன்ப்யூஸ்டு. இன்னும் சில காரணங்கள். கல்யாணத்தை நிறுத்திடுங்க!''

''கல்யாணத்தை தள்ளிப்போட முடியாதுங்க. அப்ப என் டிரான்ஸ்பர் ..''

''டிரான்ஸ்பர் வேணாம்னு லாங் லீவ் போடுங்க!''

''உங்க இளஞ்சேரன்? எதுவும் சொன்னாரா!''

''என் இளஞ்சேரனா? வாயக் கழுவுங்க அவர் யாரே நான் யாரோ .''

''அவரா?''

''அவன் அவன்...''

''பின்ன என்னதசன் காரணம்?''

''சொல்ல விரும்பவில்லை...''

''நீங்க செய்வது சரிதானா யாழினி?''

''தவறுதான் மன்னியுங்கள்!''

''உங்களுக்காக இறுதி முயற்சி செய்கிறேன். ஒரு மாதம் விடுமுறை போடுகிறேன். அதற்குள்ளாவது திருமணத்துக்கு ஒத்துக் கொள்ளுங்கள்!''

''தாங்க் யூ நாகதேவ்!''

''யாழினி!

''என்ன நாகதேவ்?''

''நம்ம கல்யாணம் என்னைக்கி வேணாலும் நடக் கட்டும். ஆனா வாங்கின பவள மோதிரம் என்ன பாவம் செஞ்சிச்சு? இத போட்டுக்கங்க ப்ளீஸ்!''

ஆழமாய் அவனை பார்த்தாள். பாவமாய் இருந்தது. பேசாமல் இடது கை மோதிர விரலை நீட்டினாள். விரலை பவ்யமாய் பிடித்து மோதிரத்தை போட்டுவிட்டான்.

இரவு.

டிரசிங் டேபிளின் முன் அமர்ந்திருந்தாள் யாழினி.

தலையிலிருந்து ஹேர் பின்களை பிரித்து வீசினாள். தலைக்கு மேலிருந்து விளக்கு வெளிச்சம் மோதிரத்தில் மோதி பளபளத்தது. நாகதேவ் நினைவுக்கு வந்தான். அழுகை பீரிட்டது. சற்று தாமதமானாலும் அவனையே திருமணம் பண்ணிக்கொள்ளவேண்டும் என நினைத்தாள்.

சீப்பை எடுத்து தலைவாரினாள், கதவு தள்ளப் பட்டது. கண்ணாடியில் இளஞ்சேரன் தெரிந்தான்.

விருட்டென்று எழுந்து நெருப்பாய் கத்தினாள்.

''உங்களுக்கு இங்கென்ன வேலை இளஞ்சேரன்?''

''பரவாயில்லை.. இன்னும் மரியாதையோட பேசுர... நா ஒண்ணும் இங்க அழையா விருந்தாளியா வரல. உன் அப்பாம்மா சம்மதத்தோடதான் வந்திருக்கேன்!'' சாகச புன்னகை செல்தான்.

''நிஜமா?''

பதில் சொல்லாமல் பக்கத்தில் வந்தான். அவள் தலை வாரிய சீப்பை எடுத்து வெளிச்சத்தில் பார்த்தான்.

''கொத்தாக தலை முடி! அழுத்தி தலை சீவினா முடி அடர்த்தி குறைஞ்சு அழகு போய்டும். அப்டியே பம்பையா விடேன்!''

''அத நீங்க சொல்லத் தேவையில்லை!''

''நான் சொல்லவந்ததே வேறு. கல்யாணத்தை நிறுத்திட்டியாமே? ரொம்ப நன்றி. அந்த நாகதேவ் உனக்கு பொருத்தம் இல்லைன்னு லேட்டா புரிஞ்சிக் கிட்ட!''

''நிறுத்தல...கொஞ்சம் தள்ளிபோட்ருக்கேன்...அவ் வளவுதான்!''

''ஒரேடியா நிறுத்திடு. நீ உண்மைலயே நாகதேவை காதலிக்கல. என் மீதுள்ள வெறுப்பை காட்டத்தான் நீ அவனை கல்யாணம் பண்ணிக்க ஒத்துக்கிட்டே!''

''டாமிட்! வெளியே போ. நாகதேவ் மேல எனக்கு காதல் இல்லாம இருக்கலாம். ஆனா பரிவு இருக்கு. கல்யாணத்திற்கு பிறகு காதலிச்சிட்டா போச்சு!''

''என்ன சொல்லு.. அவன் உனக்கு நல்ல புருசனா இருக்க முடியாது!''

''எல்லா ஆண்களுக்கும் இந்த வீண் தற்பெருமை உண்டு!''

''அட! உன் விரல்ல பவளமோதிரம்! அந்த நாகதேவ் குடுத்தானா? பரவால்லியே கல்யாணத்துக்கு முன் னாடியே நகை நட்டு வாங்கித்தரானா?''

''தட்ஸ் தி லிமிட். இதுக்கு மேல பேசின கத்தி ஊரை கூட்டுவேன்?''

''இன்னொரு தடவ கெடுக்கவந்தான்னு சொல்லு வியோ?''

ஆவேசம் அடைந்து அப்பாவின் அறைக்கு ஓடி னாள்.

அப்பா, ''என்னம்மா விஷயம்?''

கேள்வியை அலட்சியப்படுத்தியபடி மேஜை இழுப் பறையைத் திறந்து ரிவால்வர் எடுத்தாள். தோட்டாக்கள் உள்ளதா என பார்த்தாள். மீண்டும் இளஞ்சேரனிடம் ஓடி உயர்த்தினாள்.

''அடுத்து ஒரு வார்த்த பேசின...சுட்ருவேன்... அந் நியன் உனக்கு என் பெட்ரூமில் என்ன வேலை?''

''துப்பாக்கி வச்சு மிரட்ரியா?''

''மிரட்டல, உண்மைலயே சுட்ருவேன்.''

''இது என்ன தோசையா? ரிவால்வரம்மா ரிவால்வர். பெரிய ரிவால்வர் ரீட்டான்னு நினைப்பு? உண்மையிலயே உனக்கு தைரியம் இருந்தா என்னை சுடு பார்ப்போம்!''

உக்கிரம் கிளம்பியது. ட்ரிக்கரை அமுக்கினாள். சீறி வரும் தோட்டாவிடமிருந்து தப்பிக்க தரையில் சிதறினான். மீண்டும் சுடப் போனாள்.

''ஸ்டாப் இட்!'' என்ற பேய்க் குரல் முழங்கியது. திரும்பினாள். திரும்பினான். நின்றிருந்தார் முத்துப் பாண்டியன்.

''இளஞ்சேரன்!''

''சார்!''

''புறப்படுங்க!''

''சார்!''

துப்பாக்கி வாயிலிருந்து புகை சுருள் விட்டுக் கொண்டிருந்தது. யாழினி ஓடிவந்து அப்பாவை கட்டிக்கொண்டு கதறினாள். ''அப்பா! ஏம்ப்பா இவனை நெய்வேலிக்கு வரவச்சீங்க. பயங்கரமான மென்டல் டார்ச்சர்ப்பா. நீங்க கொஞ்சம் லேட்டா வந்திருந்தா அவனை கொலையே செஞ்சிருப்பேன்!''

''இளஞ்சேரன் ரொம்ப நல்லவர்ம்மா?''

''உளறாதீங்கப்பா!''

''இல்லைம்மா அவர் ரொம்ப நல்லவர்!''

''என்னப்பா பைத்தியம் கியித்தியம் பிடித்துப் போச்சா உங்களுக்கு?''

''அம்மா! உன்கிட்ட நிறைய விசயங்களை மறைச்சு வெச்சுட்டேன். எல்லா ரகசியங்களையும் உன்கிட்ட சொல்ல வேண்டிய நேரம் வந்துருச்சு!''

''புரியலைப்பா. என்ன சொல்றீங்க?''

''கண்ணால் கண்டதும் பொய் காதால் கேட்பதும் பொய், தீர விசாரிக்கிறதுதான் மெய். இளஞ்சேரனின் ஒவ்வொரு செயலுக்கும் ஒரு காரணம் இருக்கு. உன் கூட பேச அவருக்கு இன்னும் உரிமை இருக்கு!''

''என்ன உரிமைப்பா?''

''உனக்கும் இளஞ்சேரனுக்கும் இன்னும் டைவர்ஸ் ஆகலம்மா. ஸ்டில் அவர் உன் புருஷன்தாம்மா!''

ஆச்சரியத்தில் உறைந்தாள் யாழினி!

9

தலைக்கு மேலிருந்த வானம் இடிந்து விழுந்தது. நட்சத்திரங்கள் சிதறின. பூமி இரண்டாய் பிளந்து பூமியின் மையப்பகுதி நோக்கி விழுந்தாள் யாழினி.

''என்ன சொல்றீங்கப்பா...இஸ் இட் ட்ரூ?''

''உண்மைதாம்மா. இதுக்கு மேலயும் நான் எதையும் மறைக்க விரும்பல!''

''கோர்ட்ல் இளஞ்சேரனை அறைஞ்சேன். அப்புறம் சில மாசத்துல டைவர்ஸ் கிடைச்சதா கோர்ட் ஆர்டர் கொண்டு வந்தீங்க...''

''கொண்டு வந்ததா சொன்னேன். காட்டினேனா?''

''இவ்வளவு நாளா கேஸ் என்ன தான் ஆச்சு!''

''தூசி படிஞ்சு பெண்டிங்ல கிடக்கு!''

''இது நியாயமாப்பா?''

''முழுசும் கேளும்மா. உனக்கும் மாப்பிள்ளைக்கும் தொடர்ந்து நடந்த ஈகோ கிளாசை என்கிட்ட விவரமா சொல்லிருந்தார். தன்னுடைய தரப்புத் தப்பையும் ஒப்புக் கொண்டார், கோர்ட்டுல கேஸ் நடக்கறப்போ எத்த னையோ முறை என் மூலமாக உன்னிடம் சமாதானமாக முயற்சித்தார். நீ ஒத்து வரலை. நீ கன்னத்துல அறைஞ் சப்ப கூட அவர் கோபப்படல. பின்னாடி நானும் மாப்பிள் ளையும், நீதிபதியோட சேம்பருக்குப் போனோம். அங்க இளஞ்சேரன் நீதிபதி கைய பிடிச்சுக்கிட்டு கதறினார். எங்களை பிரிச்சுடாதீங்க சார்னு. காலம், சிறந்த தாதி. மனதில் எல்லா காயங்களுக்கும் காலமே மருந்து. நிச்சயம் ஒருநாள் என் யாழினி என்னுடன் சேருவாள். அதுவரை காத்திருப்பேன். அப்படி ஒருநாள் வராவிட்டாலும் அவள் நினைவுடன் சாவேன். எங்களுக்குள்ள டைவர்ஸ்ன்ற இரும்புச் சுவரை எழுப்பிடாதிங்க சார் என்றார் இளஞ் சேரன்...''

''ம்...''

''அப்புறந்தான் நீதிபதி ஒரு ஐடியா சொன்னார். சட்டப்படி விவாகரத்து கிடைத்ததாக உன்னிடம் பொய் சொல்லச் சொன்னார். சொன்னேன். அதன்பின் கோர்ட்டுக்கு இளஞ்சேரனும் போவல, உன் சார்புல நானும் போவல, ரிசல்ட், கேஸ் பெண்டிங்!''

''அப்புறம்?''

''மேற்படிப்புக்காக இளஞ்சேரன் ஜாம்செட்பூர் போய் விட்டார். வாரத்துக்கு நாலு கடிதம் உன் நலம் விசாரித்து என் அலுவலக முகவரிக்கு வந்துகிட்டே இருக்கும். ஆறு வருசத்துல ஒரு மூட்டை கடிதம் எழுதியிருப்பார். நீயும் மனது மாறுறதா இல்ல. கடைசில நான் ஒரு திட்டம் வகுத்தேன். அப்போதுதான் என்னிடம் புதுமைன்ஸ் திறக்கும் புரபோசல் வந்திருந்தது. என்னுடைய செல் வாக்கில் இளஞ்சேரனை எக்ஸ்பர்ட் கமிட்டியில் இணைத்து இங்கே வரவழைத்தேன்!''

''ம். அப்பறம்?''

''ஒரு வைரமே காலடியில் கிடந்தால் அதன் அருமை தெரியாது. அதுபோல இளஞ்சேரன் இருந்தவரை அவர் அருமை உனக்குத் தெரியவில்லை. ஆறு வருஷம் கழிச்சு சந்திக்கும் போதாவது பிரிவு உறுத்துகிறதா? உன் கல் மனசு மாறுகிறதா என கவனித்தேன். முதலில் ஒரு பார்ட்டி ஏற்பாடு செய்தேன்..''

''ஒரு அப்பா செய்யற வேலையா இது?''

''நிச்சயமா. தன்னோட பொண்ணு நல்லா இருக் கணும். அவ புருசனோட அமோகமா வாழணும்னு நினைக்கிற எந்த அப்பனும் அதைத்தான் செய்வான். உனக்கு ஒரே பொண்ணுன்னு அதிகமா செல்லம் குடுத்து வளர்த்துட்டேன். நீ உன் புருசன் கூட சண்டை போட் டுட்டு வந்தப்பயே திட்டியோ, ரெண்டு அறை அறைந்தோ திரும்பவும் புருசன் கூட வாழ வைத்திருக்கலாம். ஆனா நான், எதையும் கட்டாயப்படுத்த விரும்பவில்லை. உன் உணர்வுகளுக்கு மதிப்பளித்தேன்...''

''இந்த டிராமா அம்மாவுக்கு தெரியுமா?''

''தெரியாது!''

''அப்புறம் சொல்லுங்க...''

''விருந்துல நீ நடந்துகிட்ட முறையை பார்த்ததும் எனக்கு சிறிது சிறிதா நம்பிக்கை துளிர்த்திச்சு. திரும்பவும் வசந்தம் வரும்னு...''

''நாகதேவ் கூட எப்படி பழக விட்டீங்க?''

''எம் பொண்ணு தப்பு !செய்ய மாட்டான்ற தைரியம் தான்!''

''கல்யாணம் வரை ஒத்துக்கிட்டீங்க!''

''எல்லாம் அசட்டுத் தைரியம்தான். கல்யாணம்ன்றது தாலியின் மூன்றாவது முடிச்சுப் போடும் வரை நிச்சயமில் லையே. கார் பொம்மை எங்கு ஓடினாலும் என்ன கவலை கையில் ரிமோட் கன்ட்ரோல் இருக்கும் வரை. எப்படியும் உன் மனசை மாற்றி விடலாம் என நம்பினேன்!''

''இளஞ்சேரனுக்கு நான் ஒரு திட்டம் கொடுத்தேன். ஒரு விருந்துக்கு அவர் வீட்டுக்கு உன்னை அழைக்கச் சொன்னேன்...''

''ஏன்?''

''நீண்ட பிரிவின் !பின் கிடைக்கும் சந்திப்பு மகத் தானது. கட்டிக் கொள்ளச் செய்யும். கதறி அழச் செய் யும். பரஸ்பரம் தவறுக்கள் மன்னிக்கப்படும் என நம்பி னேன். நீ !உன் மாஜிக் கணவனை !சந்திக்கப்போவது தெரிந்து நாகதேவ் சினப்பான்; உன்னை விட்டு பிரிவான் என நினைத்தேன்!''

''அது நடக்கவில்லை!''

''ஆமாம். அதன் பின் !யோசித்து நாடகத்தில் ஒரு கேரக்டர் திணித்தேன். முக்கோணத்தை செவ்வகம் ஆக்கினேன்...''

''அபிநேஷவா?''

''கரக்ட், அவளுக்கும் இளஞ்சேரனுக்கும் காதலும் இல்லை, கத்திரிக்காயும் இல்லை. எல்லாம் செட் அப். ஒரு பொண்ணு ஒரு பையனை காதலிக்கும். பையன் கண்டுக் காம இருப்பான். கடைசில அந்த பொண்ணு வேறொரு பையனை கல்யாணம் பண்ணிக்க முடிவெடுத்து முதல் பையனுக்கு இன்விடேஷன் தருவா. அப்பத்தான் முதல் பையன் புலம்புவான் அய்யோ இவ நம்ம கைய விட்டு போனாளேன்னு. இதுதான் மனிதஇயல்பு, அது மாதிரி நீயும் பொறாமை தீயில வெந்துசாவ. இளஞ்சேரனை அபிநேஷாவுக்கு விட்டுத்தரமாட்டன்னு நினைச்சேன்...''

''ஏமாந்தீங்களா?''

''ஆமா ஏமாந்தேன். நீ என்னடான்னா 'ஆ! நீ அவளை கல்யாணம் பண்ணிக்கப் போறியா? பண்ணிக்க. நான் நாகதேவை மேரேஜ் பண்ணிக்கிறே'ன்னு முடிவெடுத்த'''

''எஸ்!''

''சதுரங்க ஆட்டத்தில் இன்னொரு காயை நகர்த்தி னேன். மேலிடத்தில் முயற்சி செய்து நாகதேவ்க்கு டிரான்ஸ்பர் ரெடி செய்தேன். பையன் உன்னை விட்டு கண்காணாம போய் தொலைஞ்சா நல்லாயிருக்குமேன்னு நினைச்சேன்!''

''ஹீம் . அதுவும் பலிக்க இல்ல?''

''ஆமாம்மா தனக்கு டிரான்ஸ்பர் ஆகிற விஷயத்தை தனக்கே சாதகமா பயன்படுத்த தெரிஞ்சிக்கிட்டான் நாகதேவ். உன்னை திருமணத்தேதி சொல்லச் சொல்லி வற்புறுத்தினான். அந்த நேரம் பார்த்து இளஞ்சேரன் அபிநேஷாவுடன் வந்து ஓட்டலில் உன் முன் ஓவர் ஆக்ட் பண்ணிவிட்டார். ஆன் தீ சடன்...நீ கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்ட!''

''மிஸ்ச்சுவஸ் அப்பா!''

''வேக வேகமா கல்யாண ஏற்பாடுகளை கவனிச்ச எனக்கு மடில நெருப்பு பொட்டலம். தலையில் அமில மழை. உன்னுடைய ஈகோவை வைத்தே உன்னை டிராப் பண்ண புதுதந்திரம் கையாண்டேன். நீயும் ஏமாந்து இளஞ்சேரனை பார்க்க தனியேபோன. ஓர் இரவு பந்தயம் நடந்தது. முதல் முறையாக ஏமாந்த?''

''கோ டு தி ஹெல் டாடி!''

''மறுநா காலைல இளஞ்சேரன் மவுனம் காத்திருக்க வேண்டும். குரங்கு புத்தி உன்னிடம் வார்த்தையாடி கோபத்தைத் தூண்டிவிட்டார். நீயும் அவமானப்பட்டு குன்றி வீட்டுக்கு வந்துட்ட. கல்யாணத்த தள்ளிப்போட்ட. டெம்பாரி சந்தோஷம் மகளே அப்ப எனக்கு!''

''அந்த சந்தோஷமும் நீடிக்கவில்லை உங்களுக்கு!''

''ஆமாம், ஆக்சுவலாய் இளஞ்சேரன் வந்ததுஉன்னை சாமதானப்படுத்த. ஆனால், உங்கள் இருவருக்கும் நாக் கில் சனி, எப்ப சந்தித்தாலும் விதண்டாவாதம் பேசி வீணாப் போறீங்க, புருசனை ஷூட் பண்ணி கொல்ல பார்த்தியேம்மா! நல்லவேளை குறி தவறிடுச்சு. நான் குறுக்கால வரலேன்னா என்னஆயிருக்கும்?''

''எல்லாம் பேசி முடிச்சிட்டீங்களாப்பா?''

''ஏம்மா?''

''வரிசையா சின்ன சின்ன தப்பா பண்ணியே நீங்க மிகப்பெரிய பிளண்டர் பண்ணியிருக்கீங்க. நடந்ததை எல்லாம் நவரசம் சொட்ட பச்சாதாபம் தொனிக்க சொன்னா பொண்ணு மாறிடுவான்னு நினைச்சிட்டீங்க. பெத்தீங்க, வளர்த்தீங்க இன்னும் மகளை புரிஞ்சுக்கலை யேப்பா. என் வாழ்க்கையை என்னன்னு நினைச்சீங்க? ஸ்டேஜ் ப்ளேயா? கோமாளிக் கூத்தெல்லாம் அடிக்க

உங்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தது என் வாழ்க்கை யில் குழப்படி பண்ண. வில்லன்ல ரெண்டுவகை. ஒண்ணு ஓபனா கொடூரத்தை காட்டி அயோக்கியத்தனம் பண்ற நம்பியார் டைப்வில்லன். இன்னொண்ணு நல்லவனா நடிச்சு பாவலா காட்டி எதிர்பாரா நேரத்துல கொலை பண்ற கிட்டி டைப் சாப்ட் வில்லன், நீங்க ரெண்டாவது டைப் சாயல் கொண்ட அப்பா. எனக்கு நல்லது பண்றதா நினைச்சோ, நடித்தோ என் வாழ்க்கையை கெடுத்திருக் கீங்க நீ என்னதான் இளஞ்சேரனுக்கு 'நல்லவன்' சாயம் பூசினாலும்-ஐ வோண்ட் பிலீவ்ஹிம். ஆறாத ரணத்தை ஏற்படுத்திட்டீங்களே! என்னை முட்டாள் ஆக்கிட்டீங் களே...இன்விடேஷன் அடிக்க விட்டு...அவன்கிட்ட மோதிரம் வாங்க விட்டு... என்னை மென்டல் டார்ச்சர் பண்ணி...யு ஆர் ஆல்சோ எ சாடிஸ்ட்ப்பா...''

''அய்யோ1 என்னை தப்பா நினைச்சுட்டேம்மா!''

''என்னை தொடாதிங்கப்பா. ஐ ஹேட் யூ!''

''கொஞ்சம் கேளும்மா...''

''கேட்டாச்சு. கேட்டுக்கேட்டு காது புளிச்சுப்போச்சு!''

''நீ ஒரு பைத்தியக்காரி மகளே! உன்னைத் திருத்த முடியாது...''

''உங்களை துர் ஆவி பீடிக்க. என்னையா பைத்தி யக்காரி என்கிறீர்கள்...'' கன்னா பின்னாவென்று பெரு மூச்சு விட்டாள் யாழினி. சுவாச சப்தம் அறை முழுவதும். ஆயுளுக்கும் தேவையான கோபத்தை கடந்த பத்தே நிமிடங்களில் காட்டி விட்டாள் யாழினி.

தந்தை, மகளுக்கு நல்லது செய்யும் நோக்கில்தான் நாடகமாடினார். ஆனால் இந்த ஆறு வருடங்களாக விவாகரத்து பெற்றவள் என்ற பட்டத்துடன் யாழினி நட மாட வேண்டியதாய் போயிற்று. அந்த மனவேதனையை

காயத்தை, அவமானத்தை எப்படி மன்னிப்பாள்? ஆண்கள் பெண்களை விளையாட்டுப் பொம்மை என்று நினைக் கிறார்கள். ஈகோ அவளுக்கு இருந்தால் பெண்மைக்கு இழுக்காம். இளஞ்சேரனைக் கண்டிக்காமல் அவனுடன் சேர்ந்து கூத்தடித்திருக்கிறார்.

முத்துப்பாண்டியன் தளர்ந்து போயிருந்தார்.

''நான் பெரிய தப்பு பண்ணிட்டேன். என் மக வளர்ந் துட்டா. சொசைட்டில பெரிய டாக்டர். பக்குவமாயிட் டாள்னு நினைச்சேன். இப்ப புரியுது அது எவ்வளவு பெரிய தப்புன்னு. என்னுடைய 28 வயது குழந்தை ஹிஸ்டீரியா நோய் கொண்டவள். காரணம் சொன்னால் நம்ப மறுப்பவள்...'' வெளியேறினார். யாழினியின் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. கண்கள் இருட்டடித் திருந்தன. முகம் பழுப்பாய் அமான்ஷ்யம் அடித்திருந்தது. புனுகுப் பூனை போல உலாத்தினாள்.

மாதர் சங்கம் போய் வந்த அம்மா நெற்றி சுருக்கி னாள்.

''என்னம்மா யாழினி?''

''அம்மா! எனக்கும் இளஞ்சேரனுக்கும் உண்மை யிலேயே டைவர்ஸ் ஆகலைம்மா!''

''இம்பாசிபிள்! அப்பா சொல்வாரா பொய்?''

''அப்பா பொய் சொல்வார்ம்மா. பொய்க்கு தனி துறை ஏற்படுத்தினால் அவரை புரபசராக போடலாம் அம்மா. அவ்வளவு கில்லாடி..'' விசயத்தை சொன் னாள்.

''அடக் கடவுளே!''

முதலில் அம்மாவும் இதில் சம்பந்தப்பட்டிருப்பாள் என சந்தேகப்பட்டாள்யாழினி. ஆனால், இவள் சொல்லச்

சொல்ல அம்மா அதிர அதிர அம்மாவின் நேர்மையை புரிந்து கொண்டாள். பாவம் அம்மா என்னைப் போல. அம்மா யோசித்து நிமிர்ந்தாள்.

''மகளே''

''என்னம்மா?''

''நாகதேவ்க்கு என்ன பதில் சொல்லப் போகிறாய்?''

''அதுதான் யோசிக்கிறேன்?''

''அம்மாடி! நீயும் இளஞ்சேரனும் லீகலா பிரியாத வரைக்கும் நாகதேவை கல்யாணம் பண்ணிக்க முடியாது. அதுக்கு எவ்வளவு காலம் ஆகுமோ அதுவரை நாகதேவ் காத்திருப்பானா, சொல் மகளே!''

''எல்லாம் பாழும் அப்பாவால்...''

''அவரைத் திட்டாதே. பாஸ்ட் இஸ் பாஸ்ட். நடக்க வேண்டியதை கவனி. என்ன செய்யறதுன்னு யோசி. ரொம்ப கோர்புல்லா நடக்கணும்''

''இப்படி செஞ்சா என்ன?''

''எப்படிம்மா?''

''நாகதேவையே கூப்பிட்டு தெளிவா பேசிடுறேனே!''

''காது குடுத்து கேட்பானா?''

''நிச்சயம் கேட்பான்!''

''என்னைக்கு அவனை பார்க்கப் போற?''

''இன்னைக்கே சாயங்காலம்!''

''ரைட் செய். வா சாப்பிடலாம்!''

''இல்லம்மா பசிக்கல!''

''வயிறு என்னம்மா பாவம் செஞ்சுது, அத பட்டினி போட? பேசாமே வாம்மா சாப்பிட..''

நாகதேவ் மிகவும் பதட்டமாய் இருந்தான். அவன் கூடவே நடந்தாள் யாழினி.

''சொல்லுங்க யாழினி? புதுசா என்ன குண்டைத் தூக்கிப் போடப் போறீங்க? திடுக்கிட்டு திடுக்கிட்டு, ஏமாந்து ஏமாந்து, காத்திருந்து காத்திருந்து எனக்கு பழகிப் போச்சுங்க...''

''இன்னைக்கிதான் எனக்கு ஒரு ரகசியம் தெரிய வந்துச்சு!''

''என்ன ரகசியம்?''

''சொன்னா திடுக்கிடப் போறீங்க!''

''பரவாயில்லை சொல்லுங்க!''

''எனக்கும் இளஞ்சேரனுக்கும் இன்னும் டைவர்சே ஆவல!''

''வாட்?''

''அந்தாளும் எங்க அப்பனும் சேர்ந்து ஒரு நாடகமாடி என்னை செமையா ஏமாத்திட்டாங்க!'' விளக்கினாள்.

''உங்களை மட்டுமா என்னையும் சேர்த்துதான்!''

''அப்கோர்ஸ் ஆமா...''

''அதனால என்ன முடிவெடுத்தீங்க?''

''லீகலா டைவர்ஸ் கிடைக்றவரைக்கும் நீங்க என்னைத் திருமணம் செஞ்சுக்க முடியாது. ஏற்கனவே நாலு வருஷம் காத்திட்டு இருந்திட்டீங்க. இன்னும் வேறயா? ப்ளீஸ் வேற நல்ல பொண்ணா பாத்து கல்யாணம் பண்ணிக்கங்க!''

''அறிவுரையா?''

''வேற வழியே தெரியல!''

''எனக்கு படு ஏமாற்றமா இருக்கு!''

''ஐ எம் ஸாரி வெரி ஸாரி!''

''எனக்கொரு ஐடியா யாழினி!''

''என்ன?''

''நாம திருமணம் கண்ணிக்காமயே சேந்து வாழ்வோம். பிராப்பரா டைவர்ஸ் கிடைச்ச பிறகு நம்ம இணைப்பை லீகலைஸ் பண்ணிக்குவம்!''

''நோ. ஐ டோண்ட் வான்ட் திஸ் அரேஞ்ச் மெண்ட!''

''எனக்காக நீங்க ஒத்துக்கிடத்தான் வேண்டும்!''

''ஐ காண்ட்!''

''சொல்றதக் கேளு!''

''என்ன முரட்டுத்தனமா பேசுறீங்க?''

''வேற எப்படி பேசச் சொல்ர?''

''வாடி போடின்னா நானும் வாடா போடான்னு வேன்!''

''சொல்லு பாப்பம்!''

''போடா நெட்டைக்கொக்கு!''

''உன்னை என்ன செய்றேன் பாருடி!'' கொத்தாய் அவளைத் தூக்கி காருக்குள் போட்டு காரை ஸ்டார் செய்தான் நாகதேவ். கார் பேய் வேகமாய் ஊருக்கு வெளியே பறந்தது.

அத்த பங்களாவுக்குள் அவளை தூக்கிச் சென்றான். படுக்கையில் போட்டான். நெருங்கினான். கதறினாள். கை கூப்பினாள்.

''ப்ளீஸ் வேண்டாம் என்னை விட்டுவிடு!''

10

நாகதேவ் வித்தியாசமாய் வெறித்தான்.

''என்ன உன்னை விட்டுர்றதா? இந்த நாலு வருசமா என்னை முழுப் பைத்தியம் ஆக்கிட்ட உன்னோட இழுத்த இழுப்புக்கெல்லாம் நான் ஆட வேண்டியதா போச்சு. ஆறு மாசம் குடும்பம் நடத்தி பழசாகிப் போன உன்னை பேனாப் போகுதுன்னு தியாக மனப்பான்மையோட திருமணம் செய்துக்க முன் வந்தா விளையாட்டு காட்ற. கழுதைக்கு முன்னாடி காரெட், எனக்கு முன்னாடி கல்யாண ஆசை என்னதான் உன்கிட்ட அபூர்வமா இருக்கு.

''நாகதேவ்! டென்ஷன் ஆகாதீங்க. நீங்க சொல்றது பாதி சரிதான். உங்க கால்ல விழுந்து மன்னிப்பு கேட்கிறேன், என்னை விட்டுடுங்க...''

''கேட்ட கேள்விக்கு பதில் நீ உண்மையிலேயே என்னை காதலிச்சியா இல்லையா?''

தயங்கினாள்.

''சும்மா சொல்லு!''

''நான் உங்களை என்னைக்குமே காதலிக்கல!''

''கல்யணாத்துக்கு ஒத்துகிட்டது...''

''விடாம நாலு வருசமா துரத்தித்துரத்தி நீங்க கெஞ்சுனது எனக்கு பாவமா இருந்துச்சு. அதான் ஒத்துக்கிட்டேன்...''

''யாழினி! உன்னை உன் அப்பாவும், இளஞ்சேரனும் ஏமாத்திட்டாங்க அவங்களை பழி வாங்கவாவது என்னோட நீ ஒத்துழைக்கலாமே!''

''ஏமாத்திட்டாங்களேன்னு கோபம் இருந்தாலும் ஒரு பக்கம் சந்தோஷமா இருக்கு!''

''ஏன்?''

''நல்லவேளை இளஞ்சேரன் என் கைய விட்டு நழுவலேன்னு!''

''அப்ப நீ இளஞ்சேரனை இன்னும் நேசிக்கறே!''

''ஆமா!''

''ஆமான்னு நீ ஒத்துகிட்டா உன்னை விட்டுடுவேன்னு நினைப்பா?''

''நிஜமாவே ஐ லவ் ஹிம். தன்மானமும் வறட்டுக் கவுரமும்தான் எனக்கு எதிரி!''

''அதுக்காவது உனக்கு தண்டனை தரணும்!''

''வேண்டாம். ப்ளீஸ்...''

''சதா உன்னைநப்த்தியேகனவு கண்டுட்டு அவ்வளவு ஈசியா விட்டுத் தர முடியுமா. இன்னைக்கு உன்னை ஜெயிக்கத்தான் போறேன்!''

''என் பிணத்தைத்தான் உன்னால தொட முடியும்!''

''அதையும் பார்ப்போம்...''

மிக நெருங்கி குனிந்து அவள் தோள்களை பலமாய் பற்றினான். நடக்கப் போகும் அவமானத்தை நினைத்து கூனிக்குறுகினாள். கண்களை இறுகமூடிக்கொண்டாள். உடல் தூக்கிப் போட்டது.

நேரம் கரைந்தது. ஒன்றும் விபரீதம் நடவாது உணர்ந்து கண் விழித்தாள் யாழினி. எதிரில் கையை கட்டி அப்படியே நின்றிருந்தான் நாகதேவ்.

''என்ன பயந்துட்டீங்களா யாழினி?''

இன்னும் ஸ்தம்பித்தே இருந்தாள். நாகரீ தவின் கேள்வி மூளைக்கு வர நேரம் பிடித்தது.

''ம்ஹ். ம்ஹ்...''

''யாழினி! உங்களை இங்க கொண்டு வந்து மோசமா பிகேவ் பண்ணினது உங்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் தரத்தான்!''

கண்களில் நீர் பொங்க அவனை ஏறிட்டாள். அவனும் அழுதான். கண்ணாடியை கழற்றி கண்களைக்துடைத்துத் கொண்டான்.

''யாழினி! உங்களை நாலுவருசமா பைந்தியக்காரன் மாதிரி காதலிச்சேன். பாராமுகமா இருந்த உங்க கைகாலை பிடிச்சாவது சம்மதம் வாங்க துடிச்சேன். கடைசில நீங்களும் ஒத்துக்கிட்டீங்க. ஆனா, அது வெறும் காதலால் அல்ல, வெறும், இரக்கம், குருட்டுப் பிச்சைக் காரனுக்கு காசுபோடும் இரக்கம் திரும்ப இளஞ்சேரனை சத்திக்கிற வரைக்கும் இயல்பா இருந்த நீங்க அவர் வந்த பிறகு மிஸ். குழப்ப யாழினி ஆயிட்டீங்க. அவர் மேலி ருந்த காதல் திரும்ப மூண்டெழுந்திருக்கிறது, ஆனால், அதை வெளிப்படுத்த உங்கள் மனம் ஒப்புக்கொள்ள வில்லை. இப்ப உண்மைபிலேயே உங்க இருவருக்குள்ள டைவர்ஸ் ஆகலேன்றது உங்களுக்கு பயங்கர சந்தோஷம். அப்படித்தானே யாழினி? என்கிட்ட இந்த தகவலை சொல்லி வேற நல்ல பொண்ணா பார்த்து கல்யாணம் பண்ணிக்கங்கன்னு சொன்னவுடன் முதலில் குழப்பம் பொங்கியது. ஆனால் யோசித்தேன், இன்னும் காத்தி

ருந்து உண்மையிலேயே டைவர்ஸ் வாங்கி உங்களை கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் அது நம்ம ரெண்டு பேருக்கும் மகிழ்ச்சிகரமாய் இராது. உங்கள் நெஞ்சில் பச்சைக் குந்தப்பட்ட இளஞ்சேரன் அழியப்போவதே இல்லை. ஆனால் ஒன்று யாழினி! உங்களுக்கு ஒரு மனம் இருக்கிறது. அதை யாரும் சிறிதும் புண்படுத்திவிடக் கூடாது என ஈகோவுடன் இருந்த நீங்க-எனக்கு ஒரு மனசு இருக்கிறது என் ஈகோவை பங்க்சர் பண்ணக் கூடாது என்று நினைத்தீர்களா? என் இதயத்தில் ஏமாற் றத்தால் ரத்தம் வழிகிறது, அதை கவனித்தீர்களா? என் நிலையில் வேறு யாராய் இருந்தாலும் நீங்கள் இந்த கட்டிலில் சீரழிக்கப்பட்டு இருப்பீர்கள். உங்கள் வாழ்க்கை பீங்கான் கோப்பையாய் உடைந்து சிதறியி ருக்கும். ஆனால் நான் பூக்கள் மீது புயலாய் அடிப்ப தில்லை. ஏமாற்ற விசத்தை தொண்டையில் நிறுத்திக் கொண்டேன்!'' திக்கித் திணறி சொல்லி அழுதான்.

யாழினி கை கூப்பினாள்.

''யூ ஆர் கிரேட் நாகதேள்!''

''யாழினி! உலகத்ல எந்த பொண்ணுக்கும் எந்த ஆணுக்கும் ரெடிமேடா சகல விதத்லயும் பொருந்திற மாதிரி புருஷனோ பொண்டாட்டியோ கிடைக்கவே கிடைக்காது. நாமதான் நம்ம எதிராளியை நமக்கு ஏத்த மாதிரி மாத்திக்கணும், முடியலேன்னா அவங்களுக்கு ஏததகாதிரி நம்ம மாறிக்கணும்.காதல் பண்ணி திருமணம் செஞ்சிக்கிறவங்களுக்கு ஏற்படுற பெரிய ப்ராபளம் ஈகோ தான்.

''காதலிக்கறப்ப ஆண் தனக்கு கொடுத்த மரியாதை எல்லாம் கல்யாணத்துக்கு பின்னாடியும் தொடரணும்னு பெண் நினைக்றா. ஆணும் சின்னச்சின்ன விஷயத்துக் கெல்லாம் சென்சிட்டிவா பிஹேவ் பண்றான். சண்டை வருது.

''எத்னை சண்டை எத்னை பிரச்னை வந்தாலும் நாம நம்ம அம்மாப்பாவ டைவர்ஸ் பண்ரமா? ஈகோன்றது ஒரு ஒட்டகம் மாதிரி. மொதல்ல கூடாரத்துக்குள்ள மூக்கை மட்டும் நீட்டும். அப்றம் முழுக்கூடாரத்தையும் ஆக்கிர மிக்கும்...''

''எல்லாம் சரி. அப்பாவும் அவரும் 'டைவர்ஸ்' நாடகம் ஆடினது தப்பில்லயா?''

''நேத்து நடந்து முடிந்த விஷயத்துக்கு தீர்வு இன் னைக்கி நூறு சொல்லலாம் ஆனா பிரயோஜனம்? அன் னைக்கி நீங்க பிடிவாதமா இருந்த சூழ்நிலைய அந்த ட்ராமாதான் அவங்களுக்கு தற்காலிகத் தீர்வாய் தெரிஞ்சி ருக்கலாம், ட்ராமா ஆறு வருஷம் நீடிக்கும்னு உங்கப்பா கனவிலயும் நினைச்சுப் பார்த்திருக்கமாட்டார்!''

''உண்மைலயே இளஞ்சேரன் மனசு மாறிருப்பார்னு நம்புரீங்களா?''

''எல்லோரும் நல்லவங்கதான். சந்தர்ப்பம் சூழ்நிலை ஒருத்தனை கெட்டவனாக்குது. உங்களை விட அழகிலும் குணத்திலும் சிறந்த பெண்கள் ஆயிரம் அவர் வழி வந்த போதும் உங்களுக்காக தன் வாழ்க்கைல கணிசமான பகுதி காத்திருந்தாரே... ஹி இஸ் எ ஜெம்!''

உருகினாள்.

''ஆமா நாகதேவ். நான் தப்புபண்ணிட்டேன்.உடனே அவர பாக்கணும். அவரைக் கட்டிக்கிட்டு அழணும். இனி என்றென்றும் பிரியமாட்டேன்னு மிழற்றணும்!''

''தாங்க்யூ...தட்ஸ் குட்!''

ஏதோ நினைத்தவளாய் பவளமோதிரத்தைக் கழற்றி னாள். ''இந்தாங்க உங்க மோதிரம். உங்கப் பட்டுப் புடவையும் நாளைக்கி...''

வேதனித்தாள்.

''யாழினி! இன்னும் நான் உங்க நண்பன் தான். நான் கொடுத்தவற்றை மீண்டும் இணையும் உங்களுக்கு நானளிக்கும் பரிசுப்பொருளாக நினைச்சிக்கங்க. நான் நார்த் இண்டியா போனாலும் உங்கரெண்டு பேரையும் மறக்கமாட்டேன். அப்பப்ப கடிதம் போட்டுக்குவம்!''

''சரி நாகதேவ்!''

''புறப்படுங்க. உங்களை இளஞ்சேரன்கிட்ட சேத்திர் ரேன்!''

எழுந்தவள் முகத்தை துடைத்துக்கொண்டாள். டச் அப் செய்து கொண்டாள்.

இருவருடனும் கார் இளஞ்சேரன் வீடு நோக்கி பறந்தது. வீடு பூட்டிக்கிடந்தது. திரும்ப தன் வீட்டுக்கு வந்தாள். அப்பாவும், அம்மாவும் கலவர முகமாய் வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தனர்.

''என்னப்பா? என்ன ஆச்சு?''

''எல்லாமே போச்சும்மா. எல்லாமே போச்சு.. கொஞ்ச நேரத்துக்கு முன்னால போன் வந்ததும்மா. புது சுரங்கத்துல விபத்தாம். ஸ்பாட்லயே எல்லாரும் இறந்தி ருப்பாங்கன்னு பயம்மா. புதைஞ்ச போனவங்களை தோண்டி எடுத்துகிட்டு இருக்காங்க. இனி...அம்மா! போச்சேம்மா என்மகனை விட அதிகமா நேசிச்சேனே இளஞ்சேரனை அந்த சிரிச்ச முகத்தை இனி என்னைக் கிம்மா பார்ப்பேன்..''

''அப்பா!'' கிரீச்சிட்டாள்.

நாகதேவ், ''மொதல்ல ஸ்பாட்டுக்கு போவோம். இளஞ்சேரனுக்கு ஒண்ணும் ஆயிராது. ப்ளீஸ் கம்...''

கார், நால்வருடன் புதுச்சுரங்கம் நோக்கி பறந்தது. சிறுசரிவு ஏற்பட்டு மண் மலை ஏற்பட்டிருந்தது. ஏக கூட்டம், ஒரு இயந்திரம் குவிந்திருந்த மண்ணை அள்ளிக் கொண்டிருந்தது. இறந்தவர்கள் கரி மண் கலந்து ஸ்டெச் சரில் காணப்பட்டனர். அதில் இளஞ்சேரன் இருக்கிறானா என அச்சத்துடன் பார்த்தாள். இல்லை. அதற்குள் ஒருவனை உயிருடன் மீட்டனர். அவனிடம் முத்துப் பாண்டியன் குனிந்தார்.

''உங்க கூட இன்னைக்கு இளஞ்சேரன் வந்தாரா?''

''ஆமா சார். வருகைப் பதிவேட்டில கையெழுத்திட்டு விட்டு எங்க கூட வந்தார்...''

நமபிக்கை நொறுங்கிப் போனார்.

''ஆனா, வந்தவர் ஒரு மாதிரியா இருந்தார். தனக் குத்தானே புலம்பிகிட்டு இருந்தார். அப்புறம் என்ன நினைச்சாரோ...ரெண்டு கடிதங்களை குடுத்துட்டு காரை கிளப்பிட்டு போயிட்டார்!''

இளஞ்சேரன் உயிர் தப்பினான் என்று இப்போது குதூகலம் காட்டுவது ஆதிவாசித்தனம். சுயநலம். உண்மை யில் இறந்தவர் குடும்பம் பரிதவிக்கும்போது நம் சுயத்துக் காக ஆனந்திக்கக் கூடாது. சிரமப்பட்டு இரு கடிதங்களை எடுத்துக் கொடுத்தான்.

அதில்—

'மாமா! ஆறு வருடங்கள் காத்திருந்தும் வசந்தம் வர வில்லை. யாழியின் மனது மாறவில்லை. நான் தோத் துட்டேன், சீக்கிரமே உண்மையிலேயே விவாகரத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள், நாகதேவுடன் சந்தோஷமாக யாழினி வாழட்டும். இனி அவர்கள் வாழ்வில் குறுக்கிட மாட்டேன். அட்வான்ஸ் வாழ்த்துக்கள். இதுவரை

நீங்கள் காட்டிய அன்புக்கு நன்றி. அத்தைக்கு என் அன்பு விசாரிப்புகள். இத்துடன் என் ராஜினாமா கடிதத்தை இணைத்துள்ளேன். நான் ஜாம்செட்பூர் புறப் படுகிறேன். ஒன்ஸ் பார் ஆல் குட் பை...

என்றென்றும் அன்புடன்.

இளஞ்சேரன்.

யாழினி துடித்தெழுந்தாள். இளஞ்சேரன் சாகவில்லை. என் இளஞ்சேரன் சாகவில்லை. ஆனால் உயிருடன் அவனை இழப்பதா. நோ, நெவர், காருக்கு பாய்ந்தாள். காரில் திரும்ப இளஞ்சேரன் குவார்ட்டர்ஸ்க்கு பறந்தாள். உள் வாசலில் வாட்ச்மேன் உட்கார்ந்திருந்தான். ஆபீஸ் கார் நின்றிருந்தது.

''சார் எங்கப்பா? சார் எங்கப்பா?''

''வீட்டை காலி பண்ணிட்டு போயிட்டார்ம்மா. காரை கார்பரேஷன்ல ஒப்படைக்கச் சொல்லிட்டார்!''

''எப்ப போனார்?''

''போய் அரைமணி நேரமாகுது?''

''எங்க போறார்னு சொன்னாரா?''

''வாயுதூத்ல சென்னை போறாரோ என்னவோ?''

காரை ஸ்டார்ட் செய்து கொண்டு வெளி வாசல் வந் தாள். ஒரு கிழவன் குறுக்கிட்டு காரை நிறுத்தினான். தலையை ஜன்னலுக்கு வெளியே நீட்டி, ''எரிச்சலா யிருக்கு. ஏய்யா காரை நிறுத்தின?''

''இளஞ்சேரன் சார் இதகுடுக்க சொன்னார்...'' நடுங்கும் குரலில் ஒரு கடிதம் நீட்டினான் கிழவன். பட படக்க கடிதத்தை பிரித்தாள்.

''டார்லிங்! ஐ ஸ்டில் லவ் யூ!''

ஆனந்தமாய் அதிர்ந்து புது பார்வையாய் கிழவனை பார்த்தாள். கிழவன், பொய் தாடியை உரித்தான். ஓவர் கோட்டை கழற்றி விசிறினான். இளஞ்சேரன் ஆனான்.

கண் சிமிட்டி தன் பிராண்ட் சிரிப்பை வெடித்தான் இளஞ்சேரன். கார் கதவை உடைத்து திறந்து கொண்டு வெளிப்பட்டாள் யாழினி.

''போகணும்தான் நினைச்சேன். போக முடியலியே.. நடத்தின டிராமால கொசுறு நேரம் காத்திருந்தேன். தேவதையே! உன்னை விட்டால் வேறு யார் எனக்கு? இனி ஊமையாகவே குடும்பம் நடத்துவோம். காதலுக்காக மட்டும் கை கால் வாயை உபயோகப்படுத்துவோம். பயந்துட்டியா கண்ணே? அவ்வளவு சீக்கிரம் செத்துடுவேனா? நம்ம பையன் பேரன் பெத்து தர வரைக்கும் சாவு எனக்கு ஏன் நமக்கு கிடையாது. வா கட்டி அணைத்துக் கொள். ஆறு வருட பிரிவு பஸ்பமாகட்டும்..''

''இந்த ஹிஸ்டீரியா குழந்தைய மன்னிச்சுகுங்க சேரன்!''

''மன்னிக்கிறேன். எத்தனை தடவை வேண்டுமானாலும் மன்னிக்கிறேன். என்னை விட்டு பிரியமாட்டேன் என்று மட்டும் உறுதி கொடு!''

''பிரியமாட்டேன். நெவர் நெவர் எகைன்...'' அவனை கட்டிக் கொண்டாள்.

''ஏம்ப்பா என்னை ஆறு வருசம் பிரிஞ்சிருந்தீங்க? நாலு அறை அறைஞ்சு வாடி என் கூட குடும்பம் நடத்தன்னு என்னை கூட்டிட்டு போயிருக்கலாமே தலைவா?''

''முதலில் நீ காய் நகர்த்துவாய் என காத்திருந்தேன்!''

''ஓ கடவுளே! இத்தனை வருசத்தை வீண் பண்ணிட்டோமே!''

''இனி! இந்திராகாந்தி சொன்னதை செயல்படுத்துவோம்!''

''என்ன சொன்னார்?''

''பேச்சை குறை செயலைப் பெருக்கு!''

''யூ நாட்டி பாய்! இந்த வேலையை ரிசைன் பண்ணிட்டு என்ன பண்ணப் போறீங்க?''

''யூனிவர்சிடில லெக்சரர் போஸ்ட் கிடைச்சிருக்கு பத்தாது?''

''போதும் தலைவா!''

''ஐ லவ் யூ யாழினி!''

''எங்க திரும்பச் சொல்லுப்பா!''

''ஏ பைத்தியமே! குட்டிப்பேயே! நான் உன்னை காதலிக்கிறேன்!''

இன்னும் இறுக்கமாக அணைத்துக் கொண்டான்.

''இறுக்கமா இன்னும் இறுக்கமா அணைப்பா. என்னை முத்தம் குடுத்தே கொல்லுப்பா...டேய் இளஞ்சேரா! ஐ லவ் யூ டா கண்ணா...'' சொன்ன வாய்க்கு ஆங்கில முத்தம் கொடுத்தாள்.

பிரிந்தவங்க கூடிட்டாங்க, என்ன என்ன வேணாலும் செய்வாங்க. இதப்போய் வேடிக்கை பார்த்துகிட்டு, அடுத்த பக்கம் திருப்பங்க. அடுத்த தடவை உங்க பொண்டாட்டிகிட்ட சூடா சண்டை போடும்போது இந்த கதையை ஒரு தடவை நினைச்சு பாருங்க. கோபம் காத்துல கரைஞ்சுடும். வீட்ல சிதம்பரம் ஆட்சி! சண்டை எப்படி வரும்ன்றீங்க. ஓகே!

(முற்றும்)